# திண்டுக்கல் மாநகராட்சி
## 06.07.2026 அன்று நடைபெற்ற இயல்பு கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விபரங்கள்

**1)** திண்டுக்கல் மாநகராட்சியில் பிரதான குடிநீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜர் அணை நீர்தேக்கத்தின் மொத்த நீர்மட்டம் உயரம் 23'6" ஆகும். தற்போது நிலவி வரும் கடும் கோடை காரணமாக 09.04.2026-அன்று அணையின் நீர்மட்டம் 3'0" ஆக உள்ளது. மேலும், அணையிலிருந்து தினசரி சுமார் 16 எம்.எல்.டி குடிநீர் திண்டுக்கல் நகருக்கு உந்தப்பட்டு வருவதால், அணையின் நீர் மட்டம் விரைவாக குறைந்து கொண்டு வருகிறது. இதனால், அணையில் உள்ள குடிநீர் Intake tower -ல் உள்ள stainer க்கு தன்னிச்சையாக (Gravity ) குடிநீர் செல்ல இயலாத நிலையில் உள்ளது. எனவே, குடிநீரை Dead Storage உள்ள குடிநீர் மற்றும் Baby dam - உள்ள குடிநீரை மின்மோட்டார்கள் பொருத்தி நீரினை உந்தி சுத்திகரிப்பு மையத்திற்கு கொண்டு செல்வதற்கு தேவையான மின்மோட்டார்கள், மின்மோட்டார் இயங்கி (starter) குழாய்கள், வயர்கள் ஆகியவற்றை சப்ளை செய்து பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் ஆகும். தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் 15.03.2026 லிருந்து நடைமுறையில் இருப்பினும், குடிநீர் பணி என்பதால் அவசர அவசியம் கருதி 10.04.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

1) திரு.ஜி.உதயக்குமார், திண்டுக்கல் 0.03 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு
2) திரு. அமல் ராஜ், திண்டுக்கல், 0.82 சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல்
3) தி/ள்.குட்கேர் என்விரோ சிஸ்டம், திண்டுக்கல். 1.06 சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் 0.03 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு. ஜி. உதயக்குமார், திண்டுக்கல் - நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது. ந.க.எண். /2026/இ4

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.2046** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**2)** திண்டுக்கல் மாநகராட்சியில் பிரதான குடிநீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜர் அணை நீர்தேக்கத்தின் மொத்த நீர்மட்டம் உயரம் 23'6" ஆகும். தற்போது நிலவி வரும் கடும் கோடை காரணமாக 09.04.2026-அன்று அணையின் நீர்மட்டம் 30" ஆக உள்ளது. மேலும், அணையிலிருந்து தினசரி சுமார் 16 எம்.எல்.டி குடிநீர் திண்டுக்கல் நகருக்கு உந்தப்பட்டு வருவதால், அணையின் நீர் மட்டம் விரைவாக குறைந்து கொண்டு வருகிறது. ஆத்தூர்

காமராஜர் அணை நீர்தேக்கத்தின் மொத்த நீர்மட்டம் குறையும் காலங்களில் குடிநீர் பெறும் வகையில் திறந்த வெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு, அவைகளின் மூலம் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் உந்தப்பட்டு சுத்திகரிப்பு மையத்திற்கு குடிநீர் பெறப்படுகிறது. மேற்படி, திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் குடிநீரின் அளவு குறைவாக உள்ளதால் தொடர்ச்சியாக குடிநீர் உந்த இயலவில்லை. இதனால், திண்டுக்கல் நகருக்கு உந்தப்படும் நீரின் அளவில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனை ஈடு செய்யும் வகையில் ஆத்தூர் அணையின் நீர்போக்கியிலிருந்து (intake tower) நீர் வெளியேறும் படுகையில் கூடுதலாக இரு எண்ணம் ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கப்படுவது அவசியமாகின்றது. இதற்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 16.00 இலட்சம் ஆகும் தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் 15.03.2026 -லிருந்து நடைமுறையில் இருப்பினும், குடிநீர் பணி என்பதால் அவசர அவசியம் கருதி 10.04.2026-அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்றுநிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

1) திரு.ஜி.உதயக்குமார், திண்டுக்கல் 0.28 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு

2) திரு. அமல் ராஜ், திண்டுக்கல், 0.48 சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல்

3) தி/ள். குட்கேர் என்விரோ சிஸ்டம், திண்டுக்கல். 1.07 சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் 0.28 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு. ஜி. உதயக்குமார், திண்டுக்கல் - நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது. ந.க.எண். /2026/இ4

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.2047</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**3)** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24,25-ல் முத்தழகுபட்டி மற்றும் பாறைப்பட்டி பகுதிகளில் இருந்து வரும் மழை நீரால் மண் சரிவு ஏற்படாமல் இருக்கவும், மண்சரிவு ஏற்பட்டால் அப்பகுதியில் உள்ள தாழ்வான பகுதிகளுக்கு மழை நீர் புகுந்திடாத வண்ணம் சேதம் அடைந்த தடுப்பு சுவரை புதிதாக கட்ட உத்தேச மதிப்பீடு தயார் செய்து ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்தாயிரம் மட்டும்) -க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். /2026/இ4

**<u>அலுவலக குறிப்பு..</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மாநகராட்சி குடிநீர் நிதியில் 2025-2026 இருந்து பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.2048</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**4)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயல்பாட்டில் உள்ள குடிநீர் வாகனம் TN 57 AB4312 என்ற வாகனத்திற்கு 2026 - 2027 ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1,64,000/- க்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.3649/2026/இ3)

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2049</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**5)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயல்பாட்டில் உள்ள குடிநீர் வாகனம் TN 57 M 2793 என்ற வாகனத்திற்கு 2026 - 2027 ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1,67,000/- க்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.3648/2026/இ3)

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2050</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**6)** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு: 6, பிளாக்:22, நகரளவு எண் 1111/3A1A4இல் 7477.5 சதுர அடி நிலத்தை, திண்டுக்கல் நகர், இரயில் நிலைய சாலையையும் காமராஜர் பேருந்து நிலையத்தையும் இணைப்பதற்காக (தற்போதைய திருவள்ளுவர் சாலை) (லேட்) எம்.எல்.கே. சூரியன், எஸ். புவனேஸ்வரி, எஸ். கதிர்பிரகாஷ் (மைனர்) என்பவர்களிடமிருந்து கடந்த 14.12.1988ல் ரூ.2,30,073/-க்கு நில ஆர்ஜிதம் செய்து பெறப்பட்ட இடம் தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மாநகராட்சி சார்பாக சாலை விரிவாக்கத்திற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.2,30,073/- போதுமானதாக இல்லை எனத் தெரிவித்து திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மனைதாரர்களால் தொடரப்பட்ட L.A.O.P No. 15/1992 வழக்கில் நாள்: 30.09.2008 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் மனுதாரருக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.85/- வீதம் இழப்பீட்டுத்தொகை, 30% கருணைத்தொகை மற்றும்

இழப்பீட்டுத்தொகைக்கு 14.12.1988 முதல் 03.01.1992 முடிய 12% தொகை கூடுதல் இழப்பீடும் வழங்கப்படவேண்டும் என்றும், மேற்கண்ட இழப்பீடு மற்றும் கருணைத்தொகை ஆகிய இரண்டும் சேர்த்து வரும் தொகையிலிருந்து ஏற்கனவே வழங்கிய ரூ.2,30,073/-ஐ கழித்துவரும் தொகைக்கு 04.01.1992 முதல் 03.01.1993 வரை முதல் ஒரு வருடத்திற்கு 9% வட்டியும், 04.01.1993 முதல் இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படும் காலம் வரை 15% வட்டியும் செலுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. மேற்கூறிய தீர்ப்பினை நிறைவேற்றுமாறு மனுதாரர்களால் E. P. No. 60/2009 வழக்கு திண்டுக்கல் முதன்மை சார்ந்த நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. ஆகையால் முதன்மை வழக்கில் கடந்த நாள்: 30.09.2008 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பை நிறைவேற்ற போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யுமாறு நாள்: 09.05.2011 அன்று மாமன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்கூறிய தீர்ப்பிற்கு எதிராக திண்டுக்கல் மாநகராட்சியால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு வழக்கு, A.S. (MD) No. 45/2013 தொடரப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த இடைக்கால உத்தரவில், நாள்; 19.03.2013 ரூ.10,00,000/-ஐ இரண்டு வார காலத்திற்குள் வைப்புத் தொகையாக செலுத்த உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு மாமன்ற தீர்மான எண்: 200, நாள்; 30.04.2013 இன் படி ரூ.10 லட்சம் காசோலையாக (காசோலை எண்: 976424, நாள்: 26.03.2013) திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கின் மீது விசாரணை மேற்கொண்ட மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை கடந்த 20.07.2022 அன்று வழங்கிய தீர்ப்பில் மனுவினை தள்ளுபடி செய்தும் நில எடுப்பு வழக்கில் திண்டுக்கல் சார்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை ஊர்ஜிதம் செய்தும் உத்தரவு பிறப்பித்தது.

எனவே, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு திருத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் மொத்த இழப்பீடு கணக்கீடு செய்யப்பட்டு அதன் சரித்தன்மையை உறுதி செய்ய முதன்மை வழக்கின் முதல் பிரதிவாதி, வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு 26.06.2024 மற்றும்16.08.2024 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பின்படி இழப்பீட்டுத் தொகையினை செலுத்த கோரி மனுதாரர் தரப்பில் திண்டுக்கல் மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு இ.பி. எண்: 89/2024 தொடரப்பட்டுள்ளது. இது குறித்து திண்டுக்கல் மாவட்ட நீதிமன்ற மாமன்ற வழக்கறிஞர் அவர்களின் சட்டக்கருத்துரு நாள்:14.11.2025 அன்று பெறப்பட்டுள்ளது. அதில் கடந்த 2013 ஆம் ஆண்டு மாநகராட்சி சார்பில் திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக தாக்கல் செய்யப்பட்ட ரூ. 10 லட்சத்தை மனுதாரர்கள்

E. A. No. 169/2013ல் பெற்றுக் கொண்டுள்ளார்கள். மேலும் மீதியுள்ள இழப்பீட்டுத் தொகையினை செலுத்தத் தவறும் பட்சத்தில் மாநகராட்சியின் வாகனங்கள் மற்றும் அலுவலக தளவாட சாமான்களை சப்தி செய்ய வேண்டி மனுதாரர்கள் வழக்கு தொடர்ந்துள்ளதால் மனுதாரர்கள் கோரியுள்ளபடி தொகையை செலுத்துமாறு கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு நினைவூட்டும் கடிதம், நாள்: 07.04.2026 அன்று இழப்பீட்டுத் தொகைக்கான கணக்கீட்டு தாளின் சரித்தன்மையை உறுதி செய்து தரக்கோரி மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது.

இது குறித்து இம்மாநகராட்சிக்கு கடந்த 20.05.2026 அன்று அரசாணை எண்: 401, நாள்: 12.10.2018, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகள் (Gurupreet Singh Versus Union of India Case) ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீட்டுக்கான கணக்கீடுத்தாள் சரிபார்க்கப்பட்டு பெறப்பட்டது. அதன்படி ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூ. 10,00,000/- போக மீதம் ரூ.36,05,943/- (30.06.2026 வரை இழப்பீட்டுக் காலம் என கணக்கிட்டு) மனுதாரருக்கு இவ்வழக்கு சம்பந்தமாக நில ஆர்ஜிதத்திற்கான இழப்பீட்ட தொகையாக வழங்க கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், அவசர அவசியம் கருதி நீதிமன்ற உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு மீதம் உள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.36,05,943/- (ரூபாய். முப்பத்தாறு இலட்சத்தி ஐந்தாயிரத்து தொண்ணூற்றி நாற்பத்தி மூன்று மட்டும்) வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 1931/ 1985 / எப்1

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு: 6, பிளாக்:22, நகரளவு எண்: 1111/3A1A4இல் 7477.5 சதுர அடி நிலத்தை, திண்டுக்கல் நகர், ரயில் நிலைய சாலையையும் காமராஜர் பேருந்து நிலைய சாலையையும் இணைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் கணக்கீட்டுன் படி கூடுதலாக வழங்கவேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.36,05,943/- (ரூபாய். முப்பத்தாறு இலட்சத்தி ஐந்தாயிரத்து தொண்ணூற்றி நாற்பத்தி மூன்று மட்டும்) வழங்க நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற வேண்டி உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது .
2) மாமன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.2051</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**7)** இம்மாநகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை உரிம இனங்கள் மற்றும் கடைகளை அனுபவித்துக் கொள்ளும் உரிம இனங்களை ஒப்படைத்திட ஏலதாரர்கள் செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை, வங்கி உத்திரவாதச் சான்றுத் தொகை, மின்கட்டண வைப்புத் தொகைகள் இம்மாமன்ற தீர்மான எண். 1803 நாள். 22.08.2025ன் படி அனுமதி பெறப்பட்டு, திண்டுக்கல் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.25 நாள். 23.10.2025ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட இனங்களை ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் மின்னனு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இனங்களை நாளது தேதி வரை எவரும் ஏலம் கோரவில்லை. எனவே பின்வரும் இனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை , வங்கி உத்திரவாத தொகை மற்றும் மின்கட்டண வைப்புத் தொகை ஆகியவற்றினை இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலின்படி குறைத்து மின்னனு இணைய வழி மற்றும் நேரடி இணையவழி இல்லா ஒப்பந்தப்புள்ளிகள் வழியாக ஒப்படைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1004/2026/அ7)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

| I | **ஆண்டு குத்தகை உரிம இனங்கள் (ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலம் அனுபவித்துக்கொள்ளும் உரிமம்) (ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்யப்படும்)** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | உரிம இனம் | ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | | | | தற்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை | |
| | | ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை (ரூபாயில்) | வங்கி உத்தரவாத ச்சான்று (ரூபாயில்) | வங்கி உத்தரவாத ச் சான்று அற்றவர் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை (ரூபாயில்) | மின் கட்டண வைப்புத் தொகை (ரூபாயில்) | செலுத்தப்பட வேண்டிய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை (ரூபாயில்) | செலுத்தப்பட வேண்டிய கூடுதல் முன் வைப்புத் தொகை |
| 1 | காமராஜர் பேருந்து நிலையத்தில் குறிப்பிட்ட நான்கு | 2,00,000/- | - | - | 12,500/- | 2,00,000/- | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | இடங்களில் தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் | | | | | | – |
| 2 | கோட்டைக்குளம் ரோடு குமரன் பூங்காவில் நுழைவுக்கட்டணம் மற்றும் இதர விளையாட்டுச் சாதனங்கள் நிறுவி கட்டணம் வசூல் செய்தல் மற்றும் சிற்றுண்டி கடைகள் அமைத்துக்கொண்டு வசூல் செய்யும் உரிமம் | 15,00,000/- | 2,50,000/- | 1,50,000/- | 12,500/- | 15,00,000/- | – |
| 3 | ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்தில் பலன் தரும் மரங்களின் காய்ப்பு பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் (தென்னை மரம் தவிர) | 10,00,000/- | - | - | - | 10,00,000/- | – |
| 4 | ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்தில் உள்ள தென்னை மரங்களின் காய்ப்பு பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் | 10,00,000/- | 5,00,000/- | 3,00,000/- | - | 10,00,000/- | – |
| 5 | காந்தி தினசரி காய்கனி சந்தையில் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50,00,000/- | 25,00,000/- | 35,00,000/- | 12,500/- | 25,00,000/- | – |
| 6 | காந்தி தினசரி காய்கனி சந்தையில் உட்புறமுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 6,00,000/- | 6,00,000/- | 3,00,000/- | 12,500/- | 2,50,000/- | – |
| 7 | காமராஜர் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15/- வீதம் நுழைவு கட்டணம் | 50,00,000/- | 50,00,000/- | 25,00,000/- | - | 25,00,000/- | – |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வசூல் செய்து கொள்ளும் உரிமம் | | | | | | |
| 8 | காந்தி தினசரி காய்கனி சந்தைக்கு வெளிப்புறத்தில் தாலுகா அலுவலக சாலையில் கட்டப்பட்டுள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் | 5,00,000/- | 5,00,000/- | 2,50,000/- | 12,500/- | 5,00,000/- | – |
| **II) கடைகள் (ஒப்படைக்கும் நாள் முதல் பனிரெண்டு ஆண்டு காலம் அனுபவித்துக்கொள்ளும் உரிமம்) (ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்யப்படும்)** | | | | | | | |
| 1 | பேகம்பூர் – மார்க்கெட் கடைகள் - 3 (**கடை எண்**: 4, 5 ,6 ) (தலா 1 கடைக்கு) | 3,00,000/- | 3,00,000/- | 2,00,000/- | 12,500/- | 3,00,000/- | – |
| 2 | கமலா நேரு சாலை மேல்மாடி கடைகள் 4 எண்ணம் (கடை எண். 5, 6, 7 மற்றும் 8) (தலா 1 கடைக்கு) | 3,00,000/- | 3,00,000/- | 2,00,000/- | 12,500/- | 3,00,000/- | – |
| 3 | காமராஜர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடத்தில் உணவக கட்டிடம் | 25,00,000/- | 50,00,000/- | 25,00,000/- | 12,500/- | 25,00,000/- | – |
| 4 | காமராஜர் பேருந்து நிலைய மேல்மாடிக் கடைகள்- 27 ( பழைய பயணிகள் தங்கும் விடுதி முதல் தள கடைகள்) (தலா 1 கடைக்கு) | 1,50,000/- | 2,00,000/- | 2,00,000/- | 12,500/- | 1,50,000/- | – |
| 5 | காமராஜர் பேருந்து நிலைய கடைகள் – எண்ணம் 3 (கடை எண். 5 ,6 மற்றும் 12) (தலா 1 கடைக்கு) | 5,00,000/- | 5,00,000/- | 3,00,000/- | 12,500/- | 5,00,000/- | – |
| 6 | மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி வாசல் சந்துக் கடைகள் 16 எண்ணம் ( தலா 1 கடைக்கு) | 3,00,000/- | 3,00,000/- | 2,00,000/- | 12,500/- | 3,00,000/- | – |

<table>
<tr><td>7</td><td>நாகல் நகர் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் 56 எண்ணிக்கை (தலா 1 கடைக்கு)<br><table><tr><td></td><td>கடைகளின் எண்ணிக்கை</td><td>கடைகளின் அளவுகள்</td></tr><tr><td>A</td><td>21</td><td>6.00 X 3.00</td></tr><tr><td>B</td><td>16</td><td>3.00 X 3.00</td></tr><tr><td>C</td><td>11</td><td>6.00 X 3.00</td></tr><tr><td>D</td><td>2</td><td>4.46 X 4.42</td></tr><tr><td>E</td><td>6</td><td>2.88 X 3.54</td></tr></table></td><td>5,00,000/-</td><td>5,00,000/-</td><td>25,00,000/-</td><td>15,500/-</td><td>2,50,000/-</td><td>_</td></tr>
<tr><td>8</td><td>நாகல் நகர் பழைய இரும்பு மற்றும் மர வியாபார வணிக வளாக கடைகள் 52 எண்ணிக்கை (தலா 1 கடைக்கு)<br><table><tr><td></td><td>கடைகளின் எண்ணிக்கை</td><td>கடைகளின் அளவுகள்</td></tr><tr><td>A</td><td>10</td><td>4.70 X 6.10</td></tr><tr><td>B</td><td>14</td><td>4.70 X 6.10</td></tr><tr><td>C</td><td>14</td><td>4.70 X 6.10</td></tr><tr><td>D</td><td>14</td><td>4.70 X 6.10</td></tr></table></td><td>5,00,000/-</td><td>5,00,000/-</td><td>25,00,000/-</td><td>15,500/-</td><td>2,50,000/-</td><td>_</td></tr>
<tr><td>9</td><td>காந்தி தினசரி காய்கனி சந்தையின் வெளிப்புறமுள்ள கடைகள் (கடை எண்.7,</td><td>3,00,000/-</td><td>-</td><td>-</td><td>-</td><td>3,00,000/-</td><td>_</td></tr>
</table>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 8,11,12) (தலா 1கடைக்கு) | | | | | | |
| 10 | காந்தி மார்க்கெட் புதிய கடை - 1<br><br>(கடை எண்.12) (தலா 1 கடைக்கு) | 3,00,000/- | - | - | - | 3,00,000/- | – |
| 11 | தாடிக்கொம்பு சாலையில் உள்ள பங்க் ஸ்டால் | 1,00,000/- | - | - | - | 1,00,000/- | – |

**<u>தீர்மானம் எண்.2052</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

8) தமிழ்நாடு மாநில 2026-ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் அறிவிப்புகள் மற்றும் தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் (Model Code of Conduct) 15.03.2026-ம் தேதி முதல் அமலுக்கு வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, முதல் 48 மணி நேரத்திற்குள் மற்றும் 72 மணி நேரத்திற்குள் அரசியல் சார்ந்த கட்சி சின்னங்கள், பேனர்கள், கொடிகள், கொடிக்கம்பங்கள், தலைவர்களின் புகைப்படங்கள் மற்றும் சிலைகள், சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள், பெயர் பலகைகள் மற்றும் இதர அரசியல் சார்ந்த விளம்பரங்கள் அனைத்தும் உரிய காலக்கெடுவிற்குள் அகற்றம் செய்யப்பட்டு அதற்கான அறிக்கைகளை சான்று மற்றும் புகைப்படங்களுடன் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேலே குறிப்பிட்ட விளம்பரங்களை உடனடியாக அகற்றம் செய்வதற்கும், மேலும் ஒரே பள்ளியில் 5 மற்றும் 5-க்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் உள்ள இடங்களில் வாக்குச்சாவடிகளை எளிதில் அறியும் வண்ணம் வேறு வேறு வண்ணங்களில் வாக்குச்சாவடியின் முன்புற சுவரில் வர்ணம் பூசுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 6,00,000/-க்கு 16.03.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

1) M/s. Srinivasa Construction, Dindigul

2) M/s.SPD Builders, Dindigul

3) Thiru.Amulraj Contractor, Dindigul

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Srinivasa Construction, Dindigul -நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பணி பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது. ந.க.எண். /2026/இ4

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.2053</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

9) தமிழ்நாடு மாநில 2026-ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 வியாழன் கிழமை நடைபெற உள்ளது. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 191 எண்ணம் வாக்குச்சாவடிகள் உள்ளது. இவ்வாக்குச்சாவடிகளை நேரில் ஆய்வு செய்த ஆட்சித்தலைவர் அவர்கள் ஒவ்வொரு திண்டுக்கல் மாவட்ட கவனிக்க வாக்குச்சாவடியின் Web Camara உட்பகுதியிலும், வெளிப்பகுதியிலும் தேர்தல் பணிகளை பொருத்துவதற்கு ஏதுவாக 5 Amp 3Pin Plug Point மற்றும் 15 Amp Plug Point உடனடியாக பொருத்த அறிவுறுத்தினார்கள். அதன்படி, 191 வாக்குச்சாவடிகள் அமையப்பெற்ற மாநகராட்சி பள்ளி கட்டிடங்கள், அங்கன்வாடி மையக்கட்டிடங்கள், அரசு பள்ளி கட்டிடங்கள், கல்லூரி கட்டிடங்கள், தனியார் பள்ளி கட்டிடங்கள் அனைத்திலும், வாக்குசாவடியின் உட்பகுதியில் 3 எண்ணம், 5 Amp 3Pin Plug Point பொருத்து மின் இணைப்பு வழங்கவும், வெளிப்பகுதியில் 1 6T GOOT GOLD 5 Amp 3Pin Plug Point, 1616br 600D 15 Amp 3Pin Plug Point 500 161600 600TLD Switch Control லுடன் மின் இணைப்பு வழங்குவதற்கும், மேலும் சாய்வு தளம் இல்லாத வாக்குச்சாவடிகளுக்கு சாய்வுத்தளம் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/- ஆகும். தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் 15.03.2026 -லிருந்து நடைமுறையில் இருப்பினும், தேர்தல் பணி என்பதால் அவசர அவசியம் கருதி 10.04.2026-அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு -

1) M/s. Srinivasa Construction, Dindigul
2) M/s.SPD Builders, Dindigul
3) Thiru.Amulraj Contractor, Dindigul

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Srinivasa Construction, Dindigul -நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் என்ற விபரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது சமர்பிக்கப்படுகிறது.

ந.க.எண். /2026/இ4

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.2054</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

10) திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வேடப்பட்டியில் அமைந்துள்ள எரிவாயு தகன மேடையின் கட்டுமானப் பணிகள் ரூ.158 லட்சம் மதிப்பீட்டில் வரும் ஜூலை 31, 2026 முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே எரிவாயு தகன மேடையினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்திட தகுதி வாய்ந்த லாப நோக்கமின்றி சேவை நோக்குடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனங்கள், தனியார் அறக்கட்டளைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள லாப

நோக்கமின்றி செயல்படக்கூடிய நிறுவனங்களிடமோ அல்லது அறக்கட்டளையிடமோ இருந்து விண்ணப்பங்களை 04.07.2026 ஆம் தேதிக்குள் பெற தினசரி தமிழ் நாளிதழில், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறையால் மாநகராட்சி சார்பாக அறிவிப்பு வெளியிட அனுமதி கோரப்படுகிறது. மேற்படி பெற்ற விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுந்த நிறுவனத்திடமோ அல்லது அறக்கட்டளையிடமோ எரிவாயு தகனா மேடையினை ஒப்படைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அதன்பேரில், அவசர அவசியம் கருதி வேடப்பட்டி எரிவாயு தகனமேடையினை லாப நோக்கமின்றி செயல்படக்கூடிய நிறுவனம் அல்லது அறக்கட்டளையிடம் ஒப்படைக்க செய்தித்தாளில் அறிவிப்பு வெளியிடவும் மற்றும் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் எரிவாயு தகன மேடையை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்திட தகுந்த நிறுவனம் அல்லது அறக்கட்டளையிடம் ஒப்படைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 6049/ 2026 / எப்1

**அலுவலக குறிப்பு**

1) வேடப்பட்டி எரிவாயு தகனமேடையினை லாப நோக்கமின்றி செயல்படக்கூடிய நிறுவனம் அல்லது அறக்கட்டளையிடம் ஒப்படைக்க செய்தித்தாளில் அறிவிப்பு வெளியிடவும் மற்றும் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் எரிவாயு தகன மேடையை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்திட தகுந்த நிறுவனம் அல்லது அறக்கட்டளையிடம் ஒப்படைக்க அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது .

2) மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.2055** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

11) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 3480695/2025/சி1, நாள். 24.06.2026-ல் திண்டுக்கல் மாநகராட்சி சாலை பாதுகாப்பு பணிகள் 2025-26 – ஆம் நிதியாண்டியின்படி கீழ்காணும் பணிக்கு ரூ. 55.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண். | இடம் | திறன் | | | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | 20W | 70W | 90W | | |
| 1 | ரவுண்ட் ரோடு | 0 | 80 | 0 | 80 | 22.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | அனுமந்தநகர் மேம்பாலம் | 0 | 0 | 86 | 86 | 13.00 |
| 3 | திருச்சி ரோடு மேம்பாலம் | 0 | 46 | 4 | 50 | 5.00 |
| 4 | கமலா நேரு மருத்துவமனை ரோடு | 0 | 109 | 0 | 109 | 10.00 |
| 5 | சிலுவத்தூர் ரோடு | 140 | 0 | 0 | 140 | 5.00 |
| | **மொத்தம்** | 140 | 235 | 90 | **465** | **55.00** |

ந.க.எண். 7108/2023/இ4

அலுவலக குறிப்பு..

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.2056** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

12) திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண். 13, ஓய்.எம்.ஆர்.பட்டி, ஆறுமுக சேர்வை சந்து உள்ளிட்ட பகுதிகளுக்கு தற்போது நிலவி வரும் வறட்சி காரணமாக மாநகராட்சி குழாய் இணைப்புகளிலிருந்து குடிநீர் சரிவர கிடைக்கவில்லை. எனவே, சிலுவத்தூர் சாலையில் புனித வளனார் மேல்நிலைப்பள்ளி முதல் ரோமன் மிஷின் 1வது சந்து வரை 200 mm விட்டமுள்ள கூடுதல் குடிநீர் பகிர்மான குழாய் பதித்து ஏற்கனவே உள்ள பகிர்மான குழாயுடன் இணைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இப்பணிக்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 10.00 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ந.க.எண். /2026/இ4

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2057** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

13) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஏ.எம்.சி சாலையில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள வணிக வளாகத்துடன் கூடிய பூ மார்க்கெட் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு அவ்விடத்தில் புதிய வணிக வளாகம் கட்டுவதற்கு மூலதனமான்ய நிதி மற்றும் இயக்குதல், பராமரித்தல், பற்றாக்குறை நிதி 2024-25-ன் கீழ் ரூ.5.40 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 12.12.2024-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை துவக்க ஏதுவாக அவ்வணிக வளாகத்தில் உள்ள கடைகள் மற்றும் பூ மார்க்கெட் கடைகளின் ஏலத்தாரர்களுக்கு மாற்றிடம் வழங்கி காலி செய்து தர பல முறை அறிவிப்பு

வழங்கப்பட்டும் நேரில் தெரிவித்தும் மற்றும் காலி செய்து தருவது தொடர்பான கூட்டம் நடத்தப்படும் ஏலத்தாரர்கள் முன்வரவில்லை. இப்பணிக்கு மாற்றாக லாரிப்பேட்டையில் புதிய வணிக வளாகம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை, மதிப்பீடுகள் வரைபடம் மற்றும் வடிவமைப்பு ஆகியன தயார் செய்து உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று சமர்பிப்பதற்கு கலந்தாலோசகர் நியமனம் செய்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. ந.க.எண். /2026/இ4

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) இப்பணிக்கான செலவினத்தை வணிக வளாகம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும் திட்ட நிதியிலிருந்தோ/ வருவாய் நிதியிலிருந்தோ மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2058</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

14) அரசு கூடுதல், தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் 06.06.2026-ம் தேதிய நேரடி ஆய்வில் மாநகராட்சி பணிகள் / சேவைகளை மேம்படுத்தும் வகையிலும், பணிகளை விரைவாக மேற்கொள்ள ஏதுவாகவும், வெளிப்புற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வாக்கி டாக்கி வயர்லெஸ் ( Walkie Talkie) கருவி வழங்கி துரித நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாநகராட்சி பகுதிகளில் நடைபெறும் பொது சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வருவாய் பிரிவு தொடர்பான அனைத்து பணிகளின் மீது விரைவு நடவடிக்கை மேற்கொள்ளுதல் பொருட்டு அனைத்து பிரிவு வெளிப்புற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வாக்கி டாக்கி ( Walkie Talkie) வயர்லெஸ் கருவி தேவைப்படும் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| மாண்புமிகு மேயர் மற்றும் துணை மேயர் | - | 2 எண்ணம் |
| ஆணையாளர் | - | 1 எண்ணம் |
| ஆணையாளரின் நேர்முக உதவியாளர் | - | 1 எண்ணம் |
| பொறியியல் பிரிவு | - | 20 எண்ணம் |
| சுகாதார பிரிவு | - | 20 எண்ணம் |
| வருவாய் பிரிவு | - | 20 எண்ணம் |

| | | |
|---|---|---|
| நகரமைப்பு பிரிவு | - | 5 எண்ணம் |
| தெரு விளக்கு பராமரிப்பு | - | 3 எண்ணம் |
| மொத்தம் | - | 72 எண்ணம் |

அதன்படி, 72 எண்ணம் வாக்கி டாக்கி மற்றும் சிம் கார்டு வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 29,50,000/-க்கு ஒப்புதல் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ந.க.எண். /2026 /இ4

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2059** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

15) தமிழ்நாடு மாநில 2026-ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 வியாழக்கிழமை நடைபெற உள்ளது. தேர்தல் தொடர்பாக விருந்தினர் மாளிகைக்கு தேர்தல் சிறப்பு பார்வையாளர்கள், அதிகாரிகள், காவல் துறை அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வருகை தர உள்ளார்கள். மேற்படி ஆய்வில் கலந்து கொள்ளும் அனைத்து துறை அலுவலர்களுக்கும் போதுமான கழிவறைகள் இல்லை. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்கள் 15.03.2026-ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரக விருந்தினர் மாளிகை வளாகத்தில் மாநகராட்சி மூலம் தற்காலிக கழிவறை அமைத்துத்தர அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, விருந்தினர் மாளிகை வளாகத்தில் தண்ணீர் வசதியுடன் கூடிய தற்காலிக ஆண்களுக்கான கழிப்பிடம் 3 எண்ணம் பெண்களுக்கான தற்காலிக கழிப்பிடம் 2 எண்ணம் ஆக மொத்தம் 5 எண்ணம் தற்காலிக கழிப்பறை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.150000/- ஆகும். தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் 15.03.2026 -லிருந்து நடைமுறையில் இருப்பினும், தேர்தல் பணி என்பதால் அவசர அவசியம் கருதி 17.03.2026-அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

1) ஸ்ரீகுமரன், திண்டுக்கல்
2) வி.ஏ.பி.சாமியானா, வடமதுரை
3) எஸ்.என்.ஆர். டெக்கரேட்டர், திண்டுக்கல்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீகுமரன், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி

மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.2060** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

16) திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண். 27-ல் உள்ள நரிப்பாறை மலையின் மேல் இரண்டு கழிப்பிடம் உள்ளது. மேற்கண்ட இரண்டு கழிப்பிடமும் இடிந்து பழுதடைந்து விழும் தருவாயில் உள்ளதால் பொதுமக்கள் கோரிக்கையின் பேரில் கழிப்பிடம் சிர செய்து தரும்படி கோரி உள்ளதால், "தூய்மை இந்திய இயக்கம் – 2.0" (10th SFC) மூலம் மலைப்பகுதியில் உள்ள இரண்டு கழிப்பிடத்தில் ஒரு கழிப்பிடம் மூக்கன் ஆசாரி சந்தில் மேற்கு பகுதியில் உள்ள கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ. 15.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தொடங்க செல்லும்போது அப்பகுதி மக்கள் இந்த கழிப்பிடம் தற்போது எங்களுக்கு தேவையில்லை என்றும், அப்பகுதி மக்கள் புதியதாக கட்டும் கழிப்பிடம் உபயோக இல்லாமல் போய் விடும் என்றும், இந்த மேற்கு பகுதியில் உள்ள மக்களுக்கு உள்ள வீடுகளில் அனைத்து மக்களும் கழிப்பிடம் உள்ளதால், இந்த கழிப்பிடம் மலையின் கிழக்குப்பகுதியில் உள்ள நரிப்பாறை சந்தில் உள்ள இடத்தில் கட்டி தரும்படியும் வறுமை கோட்டின் கீழ் உள்ள இந்த பகுதி மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்து உள்ளார்கள். மேலும், மாமன்ற உறுப்பினர்கள் கடிதம் மூலம் பரிந்துரை செய்துள்ளார்கள். எனவே, இக்கழிப்பிடம் கட்டும் இடம் மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 5435/2025/இ4

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.2061** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

17) திண்டுக்கல் மாநகராட்சியில் சொத்துவரி விதிப்பு எண் மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு எண்கள் கணிணியில் Demand (078/033/900400) தவறுதலாக ஏற்றப்பட்டு வருவதையும், 2017-18 முதல் 2026-27 வரையுள்ள காலத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ. 16,800/- மற்றும் குழாய் இணைப்பு எண். 078/033/900400-ஐ நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 3385/2026/இ2

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.2062** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

18) திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22, கதவு எண்.4 எ, பெரிய கடை வீதியில் உள்ள வரி விதிப்பு எண். 078/022/901178 வணிக நிறுவனத்திற்கு பாதாள சாக்கடை வழங்கப்படவில்லை என தெரிவித்து வரியினை நீக்கம் செய்யுமாறு திரு. ச. ரங்கநாதன் என்பவர் மனு செய்துள்ளார்.

மேற்படி மனுவினை ஆய்வு செய்யப்பட்டதில் இணைப்பு வழங்கப்படவில்லை என கண்டறியப்பட்டது. எனவே மேற்படி வரிவிதிப்பு எண் மற்றும் (2023 - 24 முதல் III-லிருந்து 2026-27 வரை) எழுப்பப்பட்ட கேட்புத் தொகை ரூ. 9,840/- நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.2465/2026/இ4(பா.ச.தி)

**அலுவலக குறிப்பு..**

மாமன்றம் அனுமதி வாங்கலாம்.

**தீர்மானம் எண்.2063** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

19) திண்டுக்கல் மாநகராட்சி காமராஜர்புரம் பகுதியில் அமைந்துள்ள மலைக்கோட்டை நீர்உந்து நிலையத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை ஒராண்டு காலத்திற்கு (01.05.2025 முதல் 30.04.2026) தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.40,00,000/- மதிப்பீட்டில் 05.06.2025-அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டிற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திருவாளர். குட்கேர் என்விரோ சிஸ்டம் பிரைவேட் லிமிட்., – நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்ற தீர்மான எண். 1721, நாள். 04.07.2025-அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான வேலை உத்தரவு 04.07.2025 அன்று வழங்கப்பட்டு ஜுலை 2025 முதல் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இப்பணியில் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும் குடிநீர் பணி என்பதாலும், டிசம்பர் 2026 வரை அதே ஒப்பந்ததாரர் திருவாளர். குட்கேர் என்விரோ சிஸ்டம் பிரைவேட் லிமிட்., – நிறுவனத்தினர் மூலம் குறைவான விலைப்புள்ளி விகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும், மேலும் மதிப்பீட்டினை விட கூடுதலாகும் தொகை ரூ. 15.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 7365/2024 /இ4

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2064** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

20) திண்டுக்கல் மாநகராட்சி ஆத்தூர் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை ஒராண்டு காலத்திற்கு (01.05.2025 முதல் 30.04.2026) தினக்கூலி அடிப்படையில்

பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு ரூ. 50,00,000/- மதிப்பீட்டில் 05.06.2025-அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டிற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திருவாளர். குட்கேர் என்விரோ சிஸ்டம் பிரைவேட் லிமிட்., – நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்ற தீர்மான எண். 1720, நாள். 04.07.2025-அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான வேலை உத்தரவு 04.07.2025 அன்று வழங்கப்பட்டு ஜுலை 2025 முதல் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இப்பணியில் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும் குடிநீர் பணி என்பதாலும், டிசம்பர் 2026 வரை அதே ஒப்பந்ததாரர் திருவாளர். குட்கேர் என்விரோ சிஸ்டம் பிரைவேட் லிமிட்., – நிறுவனத்தினர் மூலம் குறைவான விலைப்புள்ளி விகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும், மேலும் மதிப்பீட்டினை விட கூடுதலாகும் தொகை ரூ. 15.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 7364/2024 /இ4

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.2065** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

21) திண்டுக்கல் மாநகராட்சியின் வார்டு பகுதியில் முதற்கட்டமாக ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய மைய பணிகளை ஓர் ஆண்டு காலத்திற்கு (01.05.2025 முதல் 30.04.2026 ) உள்ளது. மேலும், தினகூலி அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒப்பந்தம் பெற்று பணிகளை செய்ய காலதாமத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து பணிகளை செய்யவும், சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் மேலும், ஆறு மாதக்காலத்திற்கு செய்யவும், கூடுதலாக ஏற்படும் தொகை ரூ.12.00 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து கொடுக்கவும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் கண்டுள்ள விதி எண். 248(1) -ன் அட்டவணை – II(B) பராமரிப்பு பணிகள் என்ற தலைப்பில் வரிசை எண். ii -ன் படி பணிகளின் மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் ரூ.50.00 இலட்சத்திற்குள் அமையும்பட்சத்தில் அப்பணிகளுக்கான நிர்வாக அனுமதியினை மாமன்றம் வழங்க அதிகாரப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதின் அடிப்படையில் வேலை செய்வதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 02161/2024/இ4

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.2066</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**ஒம்/இளமதி,**
**மாண்புமிகு மேயர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி**

---

**// உண்மைநகல் //**

**ஆணையர்**
**திண்டுக்கல் மாநகராட்சி.**

## 06.07.2026 அன்று நடைபெற்ற அவசர கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விபரங்கள்

**1)** திண்டுக்கல் மாநகராட்சி குடிநீர் பயன்பாட்டு வாகனம் TN57AB4312-என்ற வாகனத்திற்கு மின்கலப்பெட்டி (Battery) பழுது ஆனதால், வாகனத்தை இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, புதிய மின்கலப்பெட்டி (Battery) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,500/- ஆகும். மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.583/2026/இ3

**அலுவலகக்குறிப்பு..**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. 2026 – 2027ம் ஆண்டிற்கான குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2067** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**2)** இம்மாநகராட்சி பகுதிகளில் வடக்கு & கிழக்கு மண்டலங்களில் 24 வார்டுகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்த் தடுப்பு பணிகள் நடவடிக்கைக்காக வெளி முகமை (Outsourcing) மூலம் 01.01.2026 முதல் 30.06.2026 வரை 60 பணியாளர்களை ( DBC) , மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி நிர்ணய பட்டியலின்படி, தினக்கூலி நபர் ஒருவருக்கு ரூ.558/- (மற்றும் EPF & ESI 16.35%& சேவைக்கட்டணம் 4.90%) என்ற அடிப்படையில் Excel Neet and Tidy Agency, திண்டுக்கல் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் தற்பொழுது பொது சுகாதார அவசியம் கருதி , மேற்படி பணியை தொடர்ந்து 01.07.2026 முதல் 30.09.2026 முடிய உள்ள மூன்று மாத காலத்திற்கு வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கிடவும், அதற்குரிய தோராய செலவினம் ரூ. 25.00 (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும் ) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.10828(2)/2023/ எச்2 )

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.2068** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**3)** இம்மாநகராட்சி பகுதிகளில் மேற்கு & தெற்கு மண்டலங்களில் 24 வார்டுகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்த் தடுப்பு பணிகள் நடவடிக்கைக்காக வெளி முகமை (Outsourcing) மூலம் 01.01.2026 முதல் 30.06.2026 வரை 60 பணியாளர்களை (DBC) , மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி நிர்ணய பட்டியலின்படி, தினக்கூலி நபர் ஒருவருக்கு ரூ.558/- (மற்றும் EPF & ESI 16.35%& சேவைக்கட்டணம் 4.90%) என்ற அடிப்படையில் Excel Neet and Tidy Agency, திண்டுக்கல் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் தற்பொழுது பொது சுகாதார அவசியம் கருதி , மேற்படி பணியை தொடர்ந்து 01.07.2026 முதல் 30.09.2026 முடிய உள்ள மூன்று மாத காலத்திற்கு வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கிடவும், அதற்குரிய தோராய செலவினம் ரூ. 25.00 (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும் ) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.10828 (1)/2023/ எச்2 )

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.2069** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**4)** இம்மாநகராட்சி தாலுகா அலுவலக சாலை பின் புறம் வண்டி செட்டில் செயல்பட்டு வரும் பொது சுகாதார பிரிவு -8 க்குட்பட்ட வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கென வாங்கப்பட்ட டம்பர் பிளேசர் பின் மூன்று சக்கர மிதிவண்டி பழைய இரும்புகள், டயர்கள் உபயோகம் இல்லாத மிதிவண்டி பொருட்கள் அப்புறப்படுத்தும் பணிக்கு கடந்த 06.03.2024 அன்று ஏலம் நடத்தப்பட்டது. இப்பணிக்கு திரு.கணேசன் த/பெ சுப்புராமன் என்பவரால் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியாக ரூ.7,02,000/- ஜி.எஸ்.டி ரூ.1,26,360/- ஆக மொத்தம் ரூ.8,28,360/- மாநகராட்சிக்கு பின் வரும் விவரப்படி தொகை செலுத்தப்பட்டது.

ரசீது எண்: 078/DGL/3/23-24/0021605 நாள்: 14/03/24 ரூ.5,00,000/- ரசீது எண்: 078/DGL/3/23-24/0021980 நாள்: 16/03/24 ரூ.3,28,360/- இம்மாநகராட்சி கருவூலத்தில் OTHER INCOME- தலைப்பில் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் தொகையில் GST கணக்கிற்கு செலுத்த வேண்டிய தொகை உரிய கணக்கில் வரவு வைக்கமால், OTHER INCOME-ல் உள்ளதால் இத் தொகை ரூ.1,26,360/-யை GST கணக்கிற்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.11431/2023/எச்1**

**அலுவலகக்குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. **2026 – 2027ம்** ஆண்டிற்கான மாநகராட்சி பொது நிதியிலிருந்து தொகை செலுத்திட அனுமதிக்கலாம்.

**__தீர்மானம் எண்.2070__** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

5) திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் பயன்பாட்டு வாகனம் TN 57 CA 2727 க்கு வாகனத்திற்கு டயர்கள் பழுதடைதால் வாகனத்தை சரிவர இயக்கமுடியவில்லை. எனவே புதிய டயர்கள் எண்ணம் நான்கு வாங்கிமைக்கும் மற்றும் வாகனத்தை ஆயில் சர்வீஸ், வீல் அலாய் மென்ட், சர்வீஸ் செய்தமைக்கான செலவினம் ரூ.43385/- மேலும் வாகனத்தில் பின்பக்கம் புதிய பம்பர், மெட்டல் பம்பர், கிளாம்புகள், புதிய போல்ட் நட்கள், பம்பர் செலவுகள் என மொத்தம் ரூ. 38893/- ஆக மொத்தம் ரூ.82278/- ஐ திரு. எஸ். சேசு ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:.

ந.க.எண்.4289 / 2025/ இ3

பணியின் அவசியம் அவசரம் கருதி பணி மேற்கொண்டதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**__தீர்மானம் எண்.2071__** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

6) திண்டுக்கல் மாநகராட்சி மாண்புமிகு மேயர், அவர்களின் பயன்பாட்டு வாகனம் **TN57 BQ 5959** வாகனம் சுமார் 70,000 கி.மீ கடந்துவிட்ட காரணத்தினால் வீல் அலைமேண்ட், வீல் பேலன்ஸ், ஆயில் சர்வீஸ், ஆயில் பில்டர், டீசல் பில்டர், ஏசி புல்சர்வீஸ், முழு ஆயில் சர்வீஸ் மற்றும் கண்ணாடி வைப்பர் பிளேடு 2 எண்ணம் ஆகும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.30,000/-ஐ வருவாய் நிதி 2026-27ன் கீழ் செலவினம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.4653/2026/இ3**

**__அலுவலகக்குறிப்பு..__**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**__தீர்மானம் எண்.2072__** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7) திண்டுக்கல் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு 1 முதல் 6 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள திறந்தவெளி கழிவுநீர் கால்வாய்கள் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அனைத்து வார்டுகளிலும் உள்ள கழிவுநீர் கால்வாய்களையும் தூய்மையாக பராமரிப்பு செய்திட தினசரி 25 தூய்மைப் பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் திரு. ராமலிங்கம், திண்டுக்கல் என்ற அயல் ஒப்பந்தப்பணி நிறுவனத்திடமிருந்து பெற்று கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்து, கழிவு மண் அப்புறப்படுத்தப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி ஒப்பந்த காலம் 31.05.2026ல் முடிவடைகிறது. பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி இப்பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு 01.06.2026 முதல் 31.08.2026 வரை மூன்று மாதகாலத்திற்கு பணி உத்திரவு நீட்டிப்பு செய்து வழங்கிடவும், அதற்கான செலவினம் ரூ.15,50,000/-த்திற்கு ஒப்புதல் வேண்டியும், பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க. எண்.1810/2023/எச்2)

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. 2026-2027ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2073</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

8) திண்டுக்கல் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு 7 முதல் 12 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள திறந்தவெளி கழிவுநீர் கால்வாய்கள் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அனைத்து வார்டுகளிலும் உள்ள கழிவுநீர் கால்வாய்களையும் தூய்மையாக பராமரிப்பு செய்திட தினசரி 25 தூய்மைப் பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் திரு.ராம்நிவாஷ் ஏஜென்சி என்ற அயல் ஒப்பந்தப்பணி நிறுவனத்திடமிருந்து பெற்று கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்து, கழிவு மண் அப்புறப்படுத்தப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி ஒப்பந்த காலம் 31.05.2026ல் முடிவடைகிறது. பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி இப்பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு 01.06.2026 முதல் 31.08.2026 வரை மூன்று மாதகாலத்திற்கு பணி உத்திரவு நீட்டிப்பு செய்து வழங்கிடவும், அதற்கான செலவினம் ரூ.15,50,000/-த்திற்கு ஒப்புதல் வேண்டியும், பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க. எண்.1810/2023/எச்2)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. 2026-2027ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணி மேற்கொள்ளஅனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2074</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

9) தமிழ்நாடு மாநில 2026ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 வியாழன் கிழமை நடைபெற உள்ளது. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 191 எண்ணம் வாக்குச்சாவடிகள் உள்ளது. இவ்வாக்குச்சாவடிகளை நேரில் ஆய்வு செய்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்கள் எவ்வித சிரமமின்றி வாக்களிக்கும் வகையில் அடிப்படை வசதிகள் செய்து தர அறிவுறுத்தினார்கள். அதன்படி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 50 வாக்குச்சாவடிகளிலும், தற்போது நிலவி வரும் கோடை வெயிலிருந்து பாதுகாக்க சாமியானா பந்தல், இரவு நேரங்களில் வாக்குச்சாவடி அலுவலர்கள் தங்குவதற்கு போதுமான வெளிச்சம் இல்லாத வாக்குச்சாவடிகள் கழிப்பிடங்கள் மற்றும் தேவையான இடங்களில் 25 LED மின் குழல் விளக்கு அமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாட்டம் (Bottam) மற்றும் 20 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் கலன் சப்ளை செய்தல், கழிப்பிடங்களுக்கு பிளாஸ்டிக் வாளி மற்றும் பிளாஸ்டிக் குவளை சப்ளை செய்தல் மேசை போன்ற பணி உள்ளிட்ட அனைத்துப்பணிகளையும் வாக்குப்பதிவு நடைபெறும் 23.04.2026 அன்று அமைத்து வாக்குப்பதிவு முடிவற்ற பின் அனைத்தையும் அப்புறப்படுத்துதல் பொருட்களுக்கான வாடகை போக்குவரத்து செலவு மற்றும் வேலையாட்களுக்கான கூலி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு 15-04-2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதில் குறைவான விலைப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு

1) வேல்முருகன் பந்தல். கான்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல்

2) வி.காயத்ரி,ஆர்.கே. டெக்கரேட்டர், திண்டுக்கல்

3) ஆர்.எஸ.எஸ். வாடகை பாத்திரக்கடை அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வேல்முருகன் பந்தல் கான்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது. (ந.க.எண். /2026/இ4)

அலுவலக குறிப்பு
மாமன்றம் பதிவு செய்யலாம்.
**<u>தீர்மானம் எண்.2075</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

10) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.19891/2023/AMRUT, நாள்:09.03.2026-இன்படி AMRUT 2.0 திட்டத்தின் கீழ்-திண்டுக்கல் - Jal Hi - Amrit 2025-26 மாநகராட்சி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்காத நிலையிலுள்ள மோட்டார்கள், பம்பு செட்டுகள் புதுப்பித்து முழுமையாக இயக்கும் பணிக்கு ரூ.1.50 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண். 2855/2023/இ4

அலுவலக குறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.2076</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

11) திண்டுக்கல் மாநகராட்சி உள்ள (பா.ச.தி) சிப்பம் – II-ல் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி நடைபெற்று வருகின்றது. மேலும், இப்பகுதியில் திறவாய் தொட்டிகள் (Machine Hole) மேல்மூடி உடைந்த தொட்டிகளை சரிபார்க்கவும், உயர்த்தி அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டு தயார் செய்து தொகை ரூ. 8,20,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) – ஆகும். எனவே, இப்பணி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

ந.க.எண். 4029 /2026/இ3

அலுவலக குறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.2077</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

12) திண்டுக்கல் மாநகராட்சி காமராஜ் பேருந்து நிலையத்தில் உள்ள மதுரை ரேக் பகுதியில் உள்ள ஆறு சிறுநீர் கழிப்பிடம் கட்டிடம் மிக மோசமாக உள்ளதால் அதை பழுது மற்றும் டைல்ஸ் கற்கள் மற்றும் பேசின் புதியதாக அமைக்கவும் தண்ணீர் வசதி, மின்சார லைட் வசதி, வர்ணம் அடிப்பது பணிகளுக்கு செய்ய உத்தேச செலவினம் ரூபாய் 14.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது. (ந.க.எண்./ 2026 / இ4)

அலுவலக குறிப்பு :

1.மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்கண்ட பணியை வருவாய் நிதியின் கீழ் செய்ய அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2078</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

13) திண்டுக்கல் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி மற்றும் 5 வருடத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள KFW assisted SMIF –TN-III 2023-24 திட்டத்தின் கீழ் ரூ.74.89 கோடி மதிப்பீட்டிற்கு தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 18484/2023/டி.ஓ.1, நாள். 24.12.2025 –ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1) Construction Cost + ESHS Cost | – | Rs. 639400000.00 |
| 2) O& M Cost(for the period of 5 years) | - | Rs. 109500000.00 |
| Total | - | Rs.748900000.00 |

இப்பணிக்கு 12.02.2026-அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டினை விட 0.01 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த SR Construction Service private limited (formerly SR United Infra Developers) நிறுவனத்திற்கு 04.06.2026-அன்று Letter of Acceptance வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு விரைவில் பணி உத்தரவு வழங்கப்பட்டு, இப்பணி துவக்கப்படவுள்ளது. இப்பணியினை மேற்பார்வையிட போதிய பொறியாளர்கள் இல்லாத காரணத்தினால் இப்பணினை திட்டக்கலந்தாலோசகர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளமாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 7108/2023/இ4

அலுவலக குறிப்பு..

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) இப்பணியினை மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்தோ அல்லது திட்டப்பணி ஒதுக்கீடு தொகை சேமிப்பு தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) இப்பணி விரைவில் துவக்கப்படவுள்ளதால் மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு.மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும். மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.2079** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

14) திண்டுக்கல் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 45.00 கோடி (ஜி.எஸ்.டி 18 சதவீதம் நீங்கலாக) என கணக்கிடப்பட்டு திட்ட மதிப்பீட்டு தொகையில் 0.85 சதவீதத்திற்கு (ஜி.எஸ்.டி 18 சதவீதம் நீங்கலாக) விலைப்புள்ளி அளித்திருந்த M/s. Saran Architech , சென்னை நிறுவனத்திற்கு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 7108/2023/இ4, நாள். 23.02.2024-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 18484/2023/டி.ஓ.1, நாள். 24.12.2025 –ல் KFW assisted SMIF –TN-III 2023-24 திட்டத்தின் கீழ் ரூ.63.94 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கலந்தாலோசகர் நிறுவனத்திற்கு தொகை ரூ.45,00,00,000/- (ஜி.எஸ்.டி 18 சதவீதம் நீங்கலாக) என கணக்கிடப்பட்டு இதுவரை பட்டியல் தொகை ரூ.45,13,500/- (ஜி.எஸ்.டி உட்பட) ( ரூ. 3825000+ரூ.688500) விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது, கலந்தாலோசகர் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை விபரம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1) | Construction Cost (Excluding ESHS Cost) – | | Rs. 465348716.33 |
| 2) | GST 18% | - | Rs. 83762769.00 |
| 3) | LWF 1% (1% of Construction Cost) | - | Rs. 4653487.00 |
| 4) | Contingencies (2.5% of Construction Cost) | - | Rs. 11633718.00 |
| | Total | - | Rs. 565398691.00 |

அதன்படி தற்பொழுது கலந்தாலோசகர் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. 48,05,889/- (ரூ. 565398691.00/- x 0.85 சதவீதம்). கூடுதலாக வழங்கப்பட வேண்டிய மீதத்தொகை ரூ.292389/- ஐ வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 7108/2023/இ4

அலுவலக குறிப்பு..

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து கூடுதல் தொகையினை வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.2080** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15) திண்டுக்கல் மாநகராட்சி 01.06.2026-ல் **TN57M2869**-க்கு 2026-2027ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு விலைப்புள்ளி பெறப்பட்டது. அவை பின்வறுமாறு.

| **வ. எண்** | **விலைப்புள்ளிதாரரர் பெயர்/ முகவரி** | **விலைப் புள்ளி கோரும் தொகை** |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர் | ரூ.1,57,500/- |
| 2 | ஸ்ரீ விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.1,72,400/- |

மேற்கண்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளால் குமார் ஆட்டோ கேர் அவர்களின் விலைப்புள்ளி குறைவான உள்ளதால் **குமார் ஆட்டோ கேர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.585/2026/இ3**

**அலுவலகக்குறிப்பு..**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. **2026 – 2027ம்** ஆண்டிற்கான குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2081** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

16) திண்டுக்கல் மாநகராட்சி 01.06.2026-ல் **TN57M2793**-க்கு 2026-2027ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு விலைப்புள்ளி பெறப்பட்டது. அவை பின்வறுமாறு.

| **வ. எண்** | **விலைப்புள்ளிதாரரர் பெயர்/ முகவரி** | **விலைப் புள்ளி கோரும் தொகை** |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர் | ரூ.1,66,500/- |
| 2 | ஸ்ரீ விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.1,82,800/- |

மேற்கண்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளால் குமார் ஆட்டோ கேர் அவர்களின் விலைப்புள்ளி குறைவான உள்ளதால் **குமார் ஆட்டோ கேர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 3648/2026/இ3**

**அலுவலகக்குறிப்பு ..**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. **2026 – 2027ம்** ஆண்டிற்கான குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2082** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

17) திண்டுக்கல் மாநகராட்சி 01.06.2026-ல் **TN57AB4312**-க்கு 2026-2027ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு விலைப்புள்ளி பெறப்பட்டது. அவை பின்வருமாறு.

| **வ. எண்** | **விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி** | **விலைப் புள்ளி கோரும் தொகை** |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர் | ரூ.1,63,500/- |
| 2 | ஸ்ரீ விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.1,77,800/- |

மேற்கண்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளால் குமார் ஆட்டோ கேர் அவர்களின் விலைப்புள்ளி குறைவான உள்ளதால் குமார் ஆட்டோ கேர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 3649/2026/இ3**

**அலுவலகக்குறிப்பு ..**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. **2026 – 2027ம்** ஆண்டிற்கான குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2083** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

18) திண்டுக்கல் மாநகராட்சி குடிநீர் பயன்பாட்டு வாகனம் **TN57AB2869**-என்ற வாகனத்திற்கு மின்கலப்பெட்டி (Battery) பழுது ஆனதால், வாகனத்தை இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, புதிய மின்கலப்பெட்டி (Battery) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,500/- ஆகும். மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.584/2026/இ3**

**அலுவலகக்குறிப்பு..**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. **2026 – 2027ம்** ஆண்டிற்கான குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2084** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

19) திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவில் கீழ் இயங்கும் குடிநீர் வாகனம் எண் TN 57 2869 என்ற வாகனத்திற்கு 2026-2027 ஆண்டிற்கு சாலை வரி ரூ.10,719/- மற்றும் பசுமை வரி ரூ. 758/- ஆக மொத்தம் ரூ.11,477/- ஒட்டுநர்

எஸ். சேசு என்பவரால் செலுத்தப்பட்டது. எனவே ரூ.11,477/-ஐ ஒட்டுநர் எஸ். சேசு என்பவருக்கு வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.4654/2026/இ3)

அலுவலக குறிப்பு.
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.2085** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

20) திண்டுக்கல் மாநகராட்சி குடிநீர் பயன்பாட்டு வாகனம் **TN57AB2793**-என்ற வாகனத்திற்கு மின்கலப்பெட்டி (Battery) பழுது ஆனதால், வாகனத்தை இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, புதிய மின்கலப்பெட்டி (Battery) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,500/- ஆகும். மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.677/2026/இ3**

**அலுவலகக்குறிப்பு..**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. **2026 – 2027ம்** ஆண்டிற்கான குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2086** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

21) திண்டுக்கல் மாநகராட்சியில் கோபாலசமுத்திரம் மழைநீர் சேகரிப்பு மையத்தில் சுற்றுச்சுவர் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்படி சுவற்றினை இடித்துவிட்டு கட்டுவதற்கும் மேலும், முன்புறமுள்ள சுற்றுச்சுவரினை உயர்த்தி கட்டுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ந.க.எண். /2026/இ4

அலுவலக குறிப்பு
மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.2087** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

22) திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயல்பாட்டில் உள்ள வாகனம் TN57 AC 3740க்கு தகுதிதாலம் 20-04-2026 உடன் முடிவடைவதால் தகுதிசான்று புதுப்பிக்கும் பணிக்கு 30.04.2026 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

1. ஸ்ரீ கணபதி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு - ரூ.1,57,530/-
2.மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ், மேட்டூர் - ரூ.1,67,088/-
3.லெட்சுமி இண்டஸ்ட்ரீஸ். மேட்டூர் - ரூ.1,49,000/-

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி ரூ.1,49,000/- லெட்சுமி இண்டஸ்ட்ரீஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், பணியின் அவசியம் அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (நக.எண்.943/2026/இ3)

அகுறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.2088** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

23) திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் செயல்பாட்டில் உள்ள வாகனம் TN 57 AF 9465 க்கு தகுதிசான்று புதுப்பிக்கும் பணிக்கு 20.03.2026 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

1. ஸ்ரீ கணபதி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு -ரூ.6,33,070/-
2.மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ், மேட்டூர் - ரூ.6,43,572/-
3. லெட்சுமி இண்டஸ்ட்ரீஸ். மேட்டூர் - ரூ.5,97,965/-

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி ரூ.5,97,965/- லெட்சுமி இண்டஸ்ட்ரீஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும். பணியின் அவசியம் அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4964/2025/இ3)

அகுறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.2089** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

24) திண்டுக்கல் மாநகராட்சி 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2023-24 -ம் ஆண்டிற்கான Tied Grant நிதி ஒதுக்கீட்டின் கீழ் திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைக்கென 23 எண்ணிக்கையிலான இலகுரக (TATA ACE) வாகனங்களை கொள்முதல் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல் முறைகள் ஆணை ந.க.எண். 16484/2023/இ.ஏ2, நாள். 20.10.2023-ல் ரூ.167.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு அவற்றினை கொள்முதல் செய்வதற்கு 23.11.2023-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.167.90 இலட்சத்திற்கு

கொடுத்திருந்த தி/ள். கிரிஸ்டல் மோட்டார்ஸ், சேலம் நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று கடந்த 05.02.2024-ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை 6.2-ன் படி மேற்கூறிய வாகனங்களை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்தல், பதிவு கட்டணங்கள், காப்பீட்டு பிரீமியம், சாலைவரி மற்றும் இதர கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றுக்கான அனைத்து செலவினங்களை ஒப்பந்ததாரர் நிறுவனமே அவரது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டு அதனை இம்மாநகராட்சியால் திரும்ப செலுத்தப்படும் என்ற நிபந்தனையின் நடப்பு கோப்பு பக்கம் எண். 123, ஒப்பந்த நிபந்தனை எண். 6.2-ன் அடிப்படையில் மேற்படி ஒப்பந்ததாரர் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கூறிய வாகனங்களைப்பதிவு செய்வதற்கு செலவிடப்பட்ட செலவீனம் ரூ. 11,43,147/- க்கான பட்டியல் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 9479/2023/இ4

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.2090</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

25) திண்டுக்கல் மாநகராட்சி அம்மா உணவகங்களுக்கு கட்டிடங்களில் மராமத்து பணி மற்றும் சமையல் உபகரண பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்கு அரசாணை (நிலை) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள். 31.05.2013 மற்றும் அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடித ந.க.எண். 2807/மா.ந.1/2026-1, நாள். 18.05.2026-ல் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2026-2027-ம் ஆண்டிற்கான பொது நிதியின் கீழ் இரு பணிகளை மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 12.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 4836/2026/இ4

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.2091</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

26) திண்டுக்கல் மாநகராட்சியில் (பொதுநிதி நிதி 2026-27) மூலம் அம்மா உணவக கட்டிடங்களில் சமையல் உபகரண பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு 12.06.2026 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | M/s Srinivasa constructions | 0.42% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.7000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | C,SENTHILKUMAR | 2.72% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.7000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.42% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s Srinivasa constructions ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

ந.க.எண்.4836/2026/இ4

அலுவலக குறிப்பு:
1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மாநகராட்சி பொது நிதி (2026-27)-ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்
3) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.2092** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

27) திண்டுக்கல் மாநகராட்சியில் (பொதுநிதி நிதி 2026-27) மூலம் அம்மா உணவக கட்டிடங்களில் சமையல் உபகரண பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு 12.06.2026 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | M/s Srinivasa constructions | 0.07% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.5000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | C,SENTHILKUMAR | 1.35% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.5000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.07% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s Srinivasa constructions ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

ந.க.எண்.4836/2026/இ4

அலுவலக குறிப்பு:

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மாநகராட்சி பொது நிதி (2026-27)-ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்

3) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.2093** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

28 திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN657 AB9241 எண்ணிற்குரிய வாகனத்தின் தகுதிச்சான்று 15.07.2026.அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளதைத் தொடர்ந்து 16.07.2026 முதல் புதுப்பிக்க வேண்டிய காரணத்தினால் மேற்கண்ட வண்டியிலுள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதுப்பித்து தகுதிச்சான்று பெற அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.3.50 லட்சத்தை இம்மாநகராட்சி பொது நிதி 2026-27ன் கீழ் செலவினம் செய்ய மாமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது. (ந.க.எண்.6706/2026/இ3)

அலுவலகக்குறிப்பு.

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2094** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

29) திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதாரம் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,225 ஆகும் . தற்போதைய மக்கள் தொகை 2,30,907 ஆகும். மேலும் இம்மாநகராட்சியில் சுமார் 60,000 குடியிருப்புகள் உள்ளது. மேலும், இது 48 வார்டுகளை உள்ளடக்கியது. இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவும் டெங்கு போன்ற நோய்களையும், கொசுத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள Temephos Emulsifiable 50 % EC, Pyrethrum 2% Extract மருந்துகள் பயன்படுத்தப்பட்டு, டெங்கு தடுப்பு, கொசுப்புழு, கொசுத்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட Temephos Emulsifiable 50 % EC நல்ல நீரில் வாழும் கொசுப்பழுக்களை அழிக்கவும், Pyrethrum 2% Extract மருந்து புகை மூலம்

(Fogging) அடிக்கப்பட்டு முதிர்ந்த கொசுக்களை அழிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கண்ட மருந்துகள் இருப்புகள் மிகவும் குறைவாக இரண்டு மாத காலத்திற்கு மட்டும் உள்ளது. எனவே, அடுத்த ஒரு வருட தேவைக்கு இம்மாநகராட்சி பொசு சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மருத்துவ பணிகள் சேவைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் முலம் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் கீழ்க்கண்ட மருந்துகளை வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,00,000/- (எட்டு இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | அளவு |
|---|---|---|
| 1 | Temephos Emulsifiable 50 % EC | 400 லிட்டர் |
| 2 | Pyrethrum 2% Extract | 500 லிட்டர் |

(ந.க.எண். 7524/2024/எச்2)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட அளவுள்ள மருந்துகளை வாங்க மேற்கண்ட நிறுவனங்களுக்கு வேலை உத்திரவு வழங்கவும், அதற்குரிய செலவினம் தோராயமாக ரூ8,00,000/- (எட்டு இலட்சம்) (GST உட்பட) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2095</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

30) இம்மாநகராட்சி பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திடக்கழிவுகளை குறைத்திடும் வகையில் மறு சுழற்சி மேற்கொள்ளும் விதமான விழிப்புணர்வு மற்றும் தனி நபர் கழிப்பிடங்கள் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு பணிகளுக்கு 24 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள், 1 ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில், BPA கன்ஸ்ட்ரக்சன், திண்டுக்கல் நிறுவனத்திற்கு 01.06.2022 முதல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் பணி நீட்டிப்பு காலம் 31.05.2026 உடன் முடிவடைந்து விட்டது. மேலும் ஜூன்2026 மற்றும் ஜூலை 15ம் தேதி வரை நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து 18.05.2026ம் தேதி கடிதம் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி 01.06.2026 முதல் 15.07.2026 வரை BPA கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்து வழங்கியமைக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2232/2022/எச்2)**

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.2096**</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

31) திண்டுக்க ல் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மாநகர் நல அலுவலர் அவர்களின் பயன்பாட்டு வாகனம் TN 57 AH 8008 க்கு வாகனத்தை ஆயில் சர்வீஸ் பிரேக் பெடல் டீல்க் மாற்றம் செய்தல், இன்ஜினில் ஆயில் கசிவு, வீல் அலாய் மென்ட், ஆயில் பில்டர், டீசல் பில்டர், சர்வீஸ் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/- மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1604/2025/இ3

அலுவலக குறிப்பு..

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**தீர்மானம் எண்.2097**</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

32) இம்மாநகராட்சியின் மாண்புமிகு. மேயர் அவர்கள் மாமன்றக் கூட்டங்களின் போது அணியக் கூடிய தங்க பதக்கமாலையினை பேங்க் ஆப் பரோடா வங்கி, திண்டுக்கல் கிளையின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்புப் பெட்டகத்திற்கான கட்டணத்தை செலுத்தக் கோரி மேலாளர், பேங்க் ஆப் பரோடா வங்கி, திண்டுக்கல் அவர்களின் 23.06.2026ம் தேதிய கடித்தத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பாதுகாப்பு பெட்டகத்திற்கு ஓராண்டிற்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவை தொகை ரூ.8611/-ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.5407/2023/சி2)**

<u>**அலுவலககுறிப்பு..**</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வாடகை தொகை வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.2098**</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

33) திண்டுக்கல் மாநகராட்சியின் வார்டு பகுதியில் முதற்கட்டமாக ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் சிப்பம் – I ன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஓர் ஆண்டுகாலத்திற்கு (01.05.2025 முதல் 30.04.2026 ) உள்ளது. மேலும், தினகூலி அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒப்பந்தம் பெற்று பணிகளை செய்ய காலதாமத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து பணிகளை செய்யவும், சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் மேலும், ஆறுமாத (01.05.2026 முதல் 30.11.2026) காலநீட்டிப்பு செய்யவும். தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் கண்டுள்ள விதி எண். 248(1) -ன் அட்டவணை - II(B) பராமரிப்பு பணிகள் என்ற தலைப்பில் வரிசை எண். ii -ன் படி பணிகளின் மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் ரூ.50.00 இலட்சத்திற்குள் அமையும்பட்சத்தில் அப்பணிகளுக்கான நிர்வாக அனுமதியினை மாமன்றம் வழங்க அதிகாரப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதின் அடிப்படையில் வேலை செய்வதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.02161/2024/இ4

**<u>அலுவலகக்குறிப்பு..</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2099</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

34) திண்டுக்கல் மாநகராட்சியின் வார்டு பகுதியில் முதற்கட்டமாக ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் சிப்பம் II ன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஓர் ஆண்டு காலத்திற்கு (01.05.2025 முதல் 30.04.2026) உள்ளது. மேலும், தினகூலி அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒப்பந்தம் பெற்று பணிகளை செய்ய காலதாமத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து பணிகளை செய்யவும், சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் மேலும், ஆறுமாத (01.05.2026 முதல் 30.11.2026) காலநீட்டிப்பு செய்யவும். தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் கண்டுள்ள விதி எண். 248(1) ன் அட்டவணை II(B) பராமரிப்பு பணிகள் என்ற தலைப்பில் வரிசை எண். ii -ன் படி பணிகளின் மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் ரூ.50.00 இலட்சத்திற்குள் அமையும்பட்சத்தில் அப்பணிகளுக்கான நிர்வாக அனுமதியினை மாமன்றம் வழங்க அதிகாரப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதின் அடிப்படையில் வேலை செய்வதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.02161/2024/இ4

**<u>அலுவலகக்குறிப்பு..</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2100** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**35)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான **குமரன் பூங்காவில் நுழைவுக் கட்டணம் மற்றும் இதர விளையாட்டுச் சாதனங்கள் நிறுவி கட்டணம் வசூல் செய்தல் மற்றும் சிற்றுண்டி அமைத்து வசூல் செய்யும் உரிமத்தினை ஒப்படைக்கும் நாள் முதல்** மூன்றாண்டு காலத்திற்கு ஒப்படைத்திட கடந்த 09.02.2024 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், திரு.ரமேஷ்முரளி மற்றும் திரு. ஜெ.லல்லு பிரசாத் ஆகிய இரு நபர்கள் கலந்து கொள்ளப்பட்டதில், திரு. ஜி. ரமேஷ்முரளி என்பரால் ஓராண்டிற்கு **ரூ.7,21,500/-** (G.S.T நீங்கலாக) என ஒப்பந்தப்புள்ளி கோரியதை தொடர்ந்து இம்மாமன்ற தீர்மான எண். **1334 ,** நாள்.04.03.2024ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலான ஓராண்டு காலத்திற்கு உரிமதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் குத்தகை உரிம நிபந்தனைகளை மீறியதாக நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்களால் 25.05.2024 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு அளிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இம்மாமன்ற தீர்மான எண்.1437 , நாள்.31.07.2024ன் படி திரு. ஜி. ரமேஷ் முரளி என்பவருக்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டிருப்பினும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 8860/2017.அ7 நாள்.07.07.2025ன்படி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

கடந்த 01.04.2024 முதல் நாளது தேதி வரை மேற்கண்ட குமரன் பூங்காவிலிருந்து பெறப்பட்ட வருவாய் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிதியாண்டு விபரம் | வசூல் விபரம் | வசூல் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2021-22 | குத்தகை வழி | ரூ.1,75,000/- + G.S.T ரூ.31,500/- = மொத்தம் ரூ.2,06,500/- |
| 2 | 2024-25 (01.04.2024 to 31.03.2025) | குத்தகை வழி | ரூ.7,21,500/- + G.S.T ரூ.1,29,870/- = மொத்தம் ரூ.8,51,370/- |

| | | | |
|---|---|---|---|
| 3 | 2025-26 (01.04.2025 முதல் 07.07.2025 வரை) | குத்தகை வழி | ரூ.1,89,394/- + G.S.T ரூ.34,091/- = மொத்தம் ரூ.2,23,485/- |
| | 2025-26 (08.07.2025 முதல் 31.03.2026 வரை) | துறை வசூல் | ரூ.364200/- |
| | மூன்றாண்டு சராசரி (வ.எண்.1 முதல் 3 ) | | ரூ.4,83,364/- |
| 4 | 2026-27 (01.04.2026 முதல் 24.06.2026 வரை) | துறை வசூல் | ரூ.190975/- |

இருப்பினும் மேற்கண்ட இனங்களை ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து மின்னணு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 18.06.2026 வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1)மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை

நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா) பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் / முகவரி | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப் பட்டுள்ள தொகை ஆண்டுக்கு (ரூபாயில்) (G.S.T நீங்கலாக) | கடந்த மூன்றாண்டு சராசரி தொகை (ரூபாயில்) | கடந்த வருட வசூல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | X.S. பிரகாஷ் | ரூ.21,24,000/- | ரூ.4,83,364/- | துறை மூலம் 2025- |

| | | | | |
|---|---|---|---|---|
| | த/பெ சேவியர்,<br><br>208/14, 7 வது தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல் | | | 26 ரூ.5,55,175/- வசூல் செய்யப்பட்டுள்ளது |
| 2 | G.ரமேஷ் முரளி,<br><br>7, முனிசிபல் காலனி, நேருஜி நகர், திண்டுக்கல். | ரூ.20,16,000/- | | |
| 3 | திரு. X.அந்தோணி பிரதீப் த/பெ சேவியர்<br><br>208, மேட்டுப்பட்டி, 5 வது சந்து, திண்டுக்கல். | ரூ.15,00,000/- | | |
| 4 | J.லல்லு பிரசாத்,<br><br>17, ராமசாமிபுரம், திண்டுக்கல். | ரூ.13,00,000/- | | |

(ந.க.எண்.1004/2026/அ7)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மேற்கண்ட இனத்திற்கு பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் X.S. பிரகாஷ். , திண்டுக்கல் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.21,24,000/- திரு. G. ரமேஷ் முரளி, ,திண்டுக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.20,16,000/-**ஐ** காட்டிலும் **ரூ.1,08,000/-** கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரி தொகை ரூ.4,83,364/- காட்டிலும் **ரூ.16,40,636-/-** கூடுதலாகவும், 2025-2026ம் நிதியாண்டின் துறை வழியாக வசூல் செய்யப்பட்ட தொகை **ரூ.5,55,175/-** விட **ரூ.15,68,825/-** கூடுதலாகவும் பெறப்பட்டுள்ளதால், **X.S. பிரகாஷ் த/பெ சேவியர்**, மேட்டுபட்டி, திண்டுக்கல் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.
2) துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும், இதர வசதிகள் (கேன்டீன் மற்றும் பராமரிப்பு ) மேற்கொள்ளவும் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பெருமளவில் வருவாய் ஈட்ட இயலவில்லை.
3) மேலும், துறை மூலம் வசூல் செய்வதில் ஏற்படகூடிய பணியாளர் செலவினம் மற்றும் மின் கட்டண செலவினம் மாநகராட்சிக்கு ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும், கூடுதல் நிதியிழப்பினை தவிர்க்கும் வகையிலும், மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைப்பு செய்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2101</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**36)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான **காந்தி தினசரி காய்கனி சந்தையில் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை** ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு (2020-21 முதல் 2022-23 வரை) ஒப்படைத்திட கடந்த 18.03.2020 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பெற்றதில், திரு.இருளப்பன் த/பெ தெய்வம், திண்டுக்கல் மற்றும் திரு. முருகன், த/பெ. சிவபெருமாள், திண்டுக்கல் ஆகிய இரு நபர்கள் கலந்து கொள்ளப்பட்டதில் திரு. இருளப்பன் என்பரால் ஓராண்டிற்கு கோரப்பட்ட உயர்ந்த பட்ச ஏல கேள்வி தொகை ரூ.74,10,000/-ஐ (G.S.T நீங்கலாக) ஒப்பந்தப்புள்ளி கோரியதை தொடர்ந்து இம்மாமன்ற தீர்மானம் எண்.1888 நாள். 23.3.2020ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு 01.04.2020 முதல் 31.03.2021 வரையிலான ஓராண்டு காலத்திற்கு உரிமதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2020-21 ஆம் ஆண்டு கொரனா தொற்று காரணமாக பொதுமக்கள் அதிகம் கூடுதவதை தவிர்க்கும் வகையில் காந்தி தினசரி காய்கறி சந்தையானது அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் 1) எம்.வி.எம். அரசு மகளிர் கலைக்கல்லூரி 2) நேருஜி நினைவு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி 3) நத்தம் ரோடு அரசு தொழில் பயிற்சி பள்ளி வளாகம் முதலிய பகுதிகளில் தனித்தனியாக செயல்பட மாவட்ட நிர்வாகத்தால் அறிவுரைகள் வழங்கப்பட்டு செயல்பட்டு வரப்பெற்றது. இந்நிலையில் காந்தி தினசரி காய்கனி சந்தையில் இயங்கிவந்த ஒரு குழுவினர் இம்மாநகராட்சி எல்லைக்கு அப்பால் பழனி சாலையில் அமையப்பெற்ற கே. டி. மருத்துவமனைக்கு அருகிலுள்ள இடத்தில் பள்ளபட்டி பஞ்சாயத்து நிர்வாகத்தில் அனுமதி பெற்று தனி காய்கனி சந்தையாக செயல்பட்டனர். இம்மாநகராட்சியால் காந்தி தினசரி காய்கனி சந்தையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மீளவும் கடந்த 01.07.2022 மீண்டும் காந்தி மார்க்கெட் பகுதியில் செயல்பட அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்கண்ட 3 பகுதிகளில் இயங்கி வந்த சந்தைகள் ஒருங்கிணைந்து செயல்பட துவங்கப்பட்டது. இருப்பினும் பள்ளபட்டி பஞ்சாயத்தில் இயங்கி வரும் சந்தை காந்தி தினசரி காய்கனி சந்தையுடன் இணைக்கப்படவில்லை. இதன் காரணமாக உரிமதாரர் திரு. இருளப்பன் -க்கு இம்மாநகராட்சியால் பலமுறை அறிவிப்புகள் அனுப்பியும், உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.74,10,000/- முழுவதும் செலுத்தப்படவில்லை. எனவே காந்தி தினசரி காய்கனி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் அதன் உரிமதாரருக்கு ஒப்படைக்கவில்லை. மேலும், உரிமத் தொகை ஏதும் மாநகராட்சி கணக்கில் வரவாகவில்லை.

இந்நிலையில் இம்மாமன்ற தீர்மான எண்.324 நாள்.17.11.2022 ன் உரிமம் ரத்து செய்யப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ந.க.எண். 10193/2017/அ7

நாள்.18.11.2022 அன்று முதல் துறை மூலம் தினசரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எ ண் | நிதியாண்டு விபரம் | வசூல் விபரம் | வசூல் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2022-23 | **துறை வசூல்** | **ரூ.6,87,280/-** |
| 2 | 2023-24 | **துறை வசூல்** | **ரூ.19,06,030/-** |
| 3 | 2024-25 | **துறை வசூல்** | **ரூ.27,36,586/-** |
| 4 | 2025-26 | **துறை வசூல்** | **ரூ.28,71,635/-** |
| | **மூன்றாண்டு சராசரி** (**வ.எண்.2 முதல்** 3 / 3) | | **ரூ.25,04,750/-** |
| 5 | 2026-27(01.4.2026-24.6.2026) | **துறை வசூல்** | **ரூ.5,40,450/-** |

இருப்பினும் மேற்கண்ட இனத்தினை ஒப்படைத்திட கடந்த 23.05.2023 தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும், மேற்கண்ட ஏல அறிவிப்பினை ரத்து செய்திடவும், பள்ளபட்டி பகுதியில் இயங்கி வரும் சந்தையின் காரணமாக காந்தி தினசரி காய்கனி சந்தைக்கு வரும் வாகனங்கள் மற்றும் வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் குறைவாக வருவதால் ஏலத்தில் எடுக்கும் நபர்களுக்கு இழப்பு ஏற்படும் எனவும், மேற்படி பள்ளபட்டி பகுதியில் இருந்து ஒரு குழுவினரால் அமைக்கப்பட்ட சந்தையினை அகற்றி காந்தி தினசரி காய்கனி சந்தையுடன் ஒருங்கிணைத்த பிறகே ஏலத்தில் விட நடவடிக்கை மேற்கொள்ளவும், திரு. பி. முத்துப்பாண்டி என்பரால் 1) மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் , 2) இம்மாநகராட்சி ஆணையர், 3) வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம ஊராட்சிகள், திண்டுக்கல் மற்றும் 4) செயல் அலுவலர், பள்ளபட்டி, கிராம ஊராட்சி ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிப்பேராணை வழக்கு எண். 12675/ 2023 நாள். 02.06.2026ம் தேதிய தீர்ப்புரையில் பள்ளபட்டி பஞ்சாயத்து நிர்வாகத்தால் மேற்படி சந்தைக்கான உரிம காலம் 31.03.2023 உடன் நிறைவடைவதால், மேற்படி சங்கத்தினர் மீளவும் காந்தி தினசரி காய்கனி அங்காடிக்கு மாறுதல் செய்தவுடன் ஒருங்கிணைந்த தினசரி சந்தையாக ஏலத்தில் விடுவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து மின்னணு மற்றும்

இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 18.06.2026 வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1)மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து திரு. முத்துப்பாண்டி என்பரால் இம்மாநகராட்சிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு கடிதத்தில் மேற்கண்ட இனத்திற்கான ஏல அறிவிப்பினை இரத்து செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட இனத்தினை நாளது தேதியில் ஒப்படைத்திடுவது குறித்து மாமன்ற வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டதில் **ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை தொடரலாம்** என தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் மற்றும் நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா) பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் / முகவரி | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப் பட்டுள்ள தொகை ஆண்டுக்கு (ரூபாயில்) (G.S.T நீங்கலாக) | கடந்த மூன்றாண்டு சராசரி தொகை (ரூபாயில்) | கடந்த வருட வசூல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | **திரு. M.P.கார்த்திகேயன், 5/926-5, PWD காலனி, திருச்சி ரோடு திண்டுக்கல்.** | ரூ .44,53,000/- | ரூ.25,04,750/- | |
| 2 | **திரு. லா. இம்மானுவேல் சௌந்தரராஜ் த/பெ (லேட்) லாசர், 9, முருகன் கோவில் தெரு, திண்டுக்கல்.** | ரூ.41,00,000/- | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | **திரு. P.முத்துப்பாண்டி, 149பி, 8வது தெரு, கருணாநிதி நகர், திண்டுக்கல்.** | **ரூ.36,50,000/-/-** | | **துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் ரூ.28,71,635/- மட்டும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.** |
| 4 | **திரு. சுந்தரபாண்டி 54/24 மருத்துவ சங்க தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல்.** | **ரூ.35,00,000/-** | | |
| 5 | **பி.ராஜேஸ் பாரதிபுரம், திண்டுக்கல் ( மின்னனு இணைய வழி ஒப்பந்தப்புள்ளி )** | **ரூ.4005000/-** | | |

**(ந.க.எண். 1004/2026/அ7)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மேற்கண்ட இனத்திற்கு பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M.P.கார்த்திகேயன், திண்டுக்கல் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.44,53,000/- திரு. லா. இம்மானுவேல் சௌந்தரராஜ், திண்டுக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.41,00,000/-**ஐ** காட்டிலும் **ரூ.3,53,000/-** கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரி தொகை ரூ.25,04,750 /- காட்டிலும் **ரூ. 19,48,250/-** கூடுதலாகவும், 2025-2026ம் நிதியாண்டின் துறை வழியாக வசூல் செய்யப்பட்ட தொகை **ரூ. 28,71,635/-** விட **ரூ.15,81,365/-** கூடுதலாகவும் பெறப்பட்டுள்ளதால், திரு. M.P.கார்த்திகேயன், திண்டுக்கல் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

2) துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும், போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பெருமளவில் வருவாய் ஈட்ட இயலவில்லை.

3) மேலும், துறை மூலம் வசூல் செய்வதில் ஏற்படகூடிய பணியாளர் செலவினம் மற்றும் மின் கட்டண செலவினம் மாநகராட்சிக்கு ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும், கூடுதல் நிதியிழப்பினை தவிர்க்கும் வகையிலும், மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைப்பு செய்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2102</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**37)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான **தாடிக்கொம்பு சாலையில் உள்ள பங்க் ஸ்டால்** கடை ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து

மின்னனு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நாளது தேதி வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமங்களை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1) மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து திரு. அழகர் என்பரால் மேற்கண்ட இனத்திற்கான ஏல அறிவிப்பினை இரத்து செய்திட கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் I A 1 / 2026 மனு தாக்கல் செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட இனத்தினை நாளது தேதியில் ஒப்படைத்திடுவது குறித்து மாமன்ற வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டதில் **ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை தொடரலாம்** என 17.06.2026 அன்று தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் மற்றும் நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா) பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வஎண்** | **கடை எண்** | **ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளவர்கள் பெயர் / முகவரி விபரம்** | **GST நீங்கலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதாந்திர வாடகை விபரம் தொகை (ரூபாயில்)** |
|---|---|---|---|
| 1 | 1 | திரு. A.ஜோசப் சகாயராஜ் த/பெ அந்தோணி குரூஸ்,<br>113Կ, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல். | ரூ.3,000/- |
| | | திரு. அ.ஹரிஹரன்<br>10/89(5) செல்லாண்டி அம்மன் கோவில் தெரு, நாரயாண பிள்ளை தோட்டம், திண்டுக்கல் | ரூ.2,550/- |
| | | வே.ஹரிஹரன் த/பெ வேலுச்சாமி<br>மார்க்கெட் குமரன் தெரு<br>சோலைஹால் பின்புறம்,திண்டுக்கல். | ரூ.1,000/- |

(ந.க.எண். 1004/2026/அ7)

**அலுவலக குறிப்பு..**

1. மேற்காணும் கடைக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பினை காட்டிலும் குறைவான மதிப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதால் மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். நீதிமன்ற வழக்கு நிறைவுற்றவுடன் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2103** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**38)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான 1. **காமராஜர் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15/- வீதம் நுழைவு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம், 2. காந்தி காய்கனி மார்க்கெட் கடை எண்.1, 3) காமராஜர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடத்தில் உணவக கட்டிடம்** ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து மின்னனு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நாளது தேதி வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1)மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை

நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா) பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ள தொகை ஆண்டுக்கு (ரூபாயில்) |
|---|---|---|
| காமராஜர் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15/- வீதம் நுழைவு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | | |
| 1 | திரு. மு.விக்னேஷ்<br>த/பெ முருகன்,<br>7, இபி காலனி, செட்டிநாயக்கன் பட்டி, திண்டுக்கல். | ரூ 16,50,000/- |
| காந்தி காய்கனி மார்க்கெட் கடை எண்.1 | | |

| | | |
|---|---|---|
| 2 | **திண்டுக்கல் மாவட்ட அனைத்து தக்காளி மற்றும் காய்கனி சுமை ஏற்வோர் மற்றும் இறக்குவோர் நல சங்கம், காந்தி மார்க்கெட் திண்டுக்கல்.** | **ரூ.7,500/-** |
| **காமராஜர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடத்தில் உணவக கட்டிடம்** | | |
| 3 | **திரு. S.கந்தசாமி<br>த/பெ சுப்பா நாயக்கர்,<br>10எ, விநாயகர் அக்கரைப்பட்டி, கம்பிளியம்பட்டி, திண்டுக்கல்.** | **ரூ.42,000/** |

(ந.க.எண்.1004/2026/அ7)

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட 3 இனங்களிற்கு தலா ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளதால் மேற்கண்ட இனங்களிற்கு மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**தீர்மானம் எண்.2104** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**39)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான 1) **கமலா நேரு சாலை மேல்மாடி கடை எண்.5 , 6, 7 மற்றும் 8, 2) காமராஜர் பேருந்து நிலைய கடை எண். 5 , 6 , 3) காந்தி மார்க்கெட் புதிய கடை எண்.12,** ஆகிய 6 கடைகளை ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து மின்ணனு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நாளது தேதி வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1) மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை

நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா) பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வஎண்** | **கடை எண்** | **ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளவர்கள் பெயர் / முகவரி விபரம்** | **GST நீங்கலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதாந்திர** | **மதிப்பீட்டிற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து** |
|---|---|---|---|---|

| | | | வாடகை விபரம் தொகை (ரூபாயில்) | <u>தகுதி பெறும் ஒப்பந்தப்புள்ளி தாரர்கள்</u> விபரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **1. கமலா நேரு சாலை மேல்மாடி கடை** | | | | |
| 1 | 5 | திரு.பி.செல்வராஜன் த/பெ எ. பாலசுப்ரமணி 2/175 கொத்தப்புள்ளி ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் | ரூ.4,650/- | திரு.பி. செல்வராஜன் |
| | | திரு. எஸ். பரத்குமார் த/பெ சரவணன், 49 ஜி, மேற்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல் | ரூ.4,000/- | |
| 2 | 6 | திரு. எஸ்.பரத்குமார் த/பெ சரவணன், 49 ஜி,மேற்கு கோவிந்தா புரம், திண்டுக்கல் | ரூ 4,000/- | திரு.பி. செல்வராஜன் |
| | | திரு. ,பி.செல்வராஜன் த/பெ எ. பாலசுப்ரமணி 2/175 கொத்தப்புள்ளி ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் | ரூ. 4,650/- | |
| 3 | 7 | திரு. எம்.ஹரிஹரன். 30 கிழக்கு விஸ்தரிப்பு ஏரியா மேட்டுப்பட்டி, திண்டுக்கல் | ரூ 4,650/- | திரு. எம்.ஹரிஹரன். |
| | | திரு.எம்.முருக சங்கர் த/பெ முத்து 55/1 கவடக்கார தெரு, திண்டுக்கல் | ரூ. 3,500/- | |
| **2. காந்தி மார்க்கெட் புதிய கடை** | | | | |
| 4 | 12 | திரு. எம் . நவீன்கண்ணன் த/பெ முருகன் நடுத்தெரு, வீரக்கல் கூத்தாம்பட்டி, திண்டுக்கல் | ரூ.8,610/- | திரு.எம்.நவீன் கண்ணன் |
| | | திரு. V.K. சுந்தர், முள்ளிப்பாடி கிராமம், அணைப்பட்டி, திண்டுக்கல் | ரூ.8,300/ | |
| | | திரு. A.ஜோசப் சகாயராஜ் த/பெ அந்தோணி குரூஸ், 113q, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல். | ரூ 7,300/- | |
| **3. காமராஜர் பேருந்து நிலைய கடை** | | | | |
| **5** | 5 | திரு. G. உதயகுமார், | ரூ.16,946/- | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4/34, காந்திஜி நகர், திருச்சி ரோடு, திண்டுக்கல். | | |
| | | திரு. கிறிஸ்டி வினோத், 150/21 சி சுக்கான் மேடு, நாகல் நகர் , திண்டுக்கல் | ரூ.15,500/-/- | திரு. G. உதயகுமார் |
| | | திரு. S.லோகேஷ், 24/12, சுபேதார் லைன், பழனிரோடு, திண்டுக்கல். | ரூ.15,000/- | |
| 6 | 6 | திரு. R.A.துரைப்பாண்டி த/பெ ராஜ், 1 பிளாட், எம்.எஸ் நகர், பொன்னகரம், ரெட்டியபட்டி, திண்டுக்கல். | ரூ. 22,222/- | |
| | | திரு. G. உதயகுமார், 4/34, காந்திஜி நகர், திருச்சி ரோடு, திண்டுக்கல். | ரூ.16,946/- | திரு. R.A.துரைப்பாண்டி த/பெ ராஜ் |
| | | திரு.கிறிஸ்டி வினோத், 150/21 சி சுக்கான் மேடு, நாகல் நகர், திண்டுக்கல் | ரூ.15,500/- | |
| | | திரு. S.லோகேஷ், 24/12, சுபேதார் லைன், பழனிரோடு, திண்டுக்கல். | ரூ.15,000/- | |

(ந.க.எண். 1004/2026/அ7)

<u>அலுவலக குறிப்பு..</u>

1. மாநகராட்சி கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பினை காட்டிலும் கூடுதலான மதிப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதாலும் கலம் 5ல் கண்டுள்ள விபரப்படியான நபர்களுக்கு கடைகளை **<u>மாதாந்திர வாடகை அடிப்படையில் ஒப்படைக்கும் நாள் முதல் 12 வருட காலம்</u>** ஒப்படைப்பு செய்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி கூடுதல் முன்வைப்பு தொகை (12 மாத வாடகை) யினையும், ஒப்பந்தப்பத்திரம் சமர்ப்பித்த பிறகு கடைகளை அலுவலகத்தால் ஒப்படைப்பு செய்திடவும், மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. 12 ஆண்டு குத்தகை / மாதாந்திர வாடகை இனங்களில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வு செய்வதற்கு பதிலாக ஒவ்வாரு ஆண்டும் சீராக 5 சதவீதம் என உயர்வு செய்து மாதாந்திர வாடகைத் தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
4. இம்மாநகராட்சியால் இயற்றப்பட்டுள்ள குத்தகை மற்றும் கடை வாடகை தொடர்பான உப விதிகள், அரசால் இயற்றப்படும் சட்டங்கள், அரசாணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு உட்பட்டு செயல்படவும் தவறும்

குத்தகைதாரர்களின் உரிமங்களை ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைகளுடன் கடைகளை ஒப்படைப்பு செய்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2105** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**40)** இம்மாநகராட்சிக்கு இம்மாநகராட்சிக்கு சொந்தமான **காந்தி தினசரி காய்கனி சந்தையில் உட்புறமுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை** ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து மின்னனு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நாளது தேதி வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1) மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை

நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா) பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை நாள் ஒன்றுக்கு (ரூபாயில்) | அதனடிப்படையில் ஆண்டுக்கு (365 தினங்களுக்கு) குறிப்பிடப்பட்டுள்ள ஓராண்டு தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | வே.ஹரிஹரன் த/பெ வேலுச்சாமி<br>மார்க்கெட் குமரன் தெரு<br>சோலைஹால் பின்புறம், திண்டுக்கல். | ரூ.300/- | ரூ.1,09,500/- |
| 2 | திரு. க.அழகர்சாமி த/பெ கண்ணன்,<br>91/எ நாயக்கர் காம்பவுண்ட், மதுரை ரோடு, திண்டுக்கல். | ரூ.285/- | ரூ.1,04,025/- |

(ந.க.எண்.1004/2026/அ7)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மேற்கண்ட இனத்திற்கு முதன் முறையாக கடந்த 19.06.2026-ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.வே. ஹரிஹரன் த/பெ வேலுச்சாமி திண்டுக்கல் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,09,500/- திரு. க.அழகர்சாமி த/பெ கண்ணன்,திண்டுக்கல் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,04,025/- காட்டிலும் ரூ.5,475/- கூடுதலாகவும், பெறப்பட்டுள்ளதாலும் கழிப்பிடத்தினை தூய்மை பணியாளர்களைக் கொண்டு பராமரிப்பதில் ஏற்படும் செலவினம் மற்றும் வசூல் பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளருக்கான செலவினம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் **வே.ஹரிஹரன் த/பெ வேலுச்சாமி**, திண்டுக்கல் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.2106</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

41) இம்மாநகராட்சிக்கு இம்மாநகராட்சிக்கு சொந்தமான **காமராஜர் பேருந்து நிலைய கடை எண் 12-ஜ** (வரிவிதிப்பு எண். 078/344) கடந்த 1999 ஆம் ஆண்டு பொது ஏலம் மூலமாக மாதாந்திர வாடகைக்கு திருமதி. சாந்தி பவர் கிருஷ்ணன் என்பவர் உரிமம்பெற்று நடத்திவந்த நிலையில் கடை வாடகையினை குறைத்து தரக்கோரி கடை உரிமதாரால் வழக்கு எண் WP. NO.22267/2017 மற்றும் WP.NO.22269/2017 சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும், நீதிமன்ற தீர்ப்பின்படி வாடகைத் தொகையினை மாநகராட்சிக்கு முறையாக தொடர்ச்சியாக செலுத்தாததால் கடந்த ஆண்டுகளில் கடையானது மாநகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட கடையினை ஒப்படைத்திட கடந்த 18.03.2025, 28.03.2025, மற்றும் 25.02.2026 தேதிகளில் நாளிதழ்கள் வழியாக உரிய விளம்பரம் செய்து மின்ணனு மற்றும் இணையவழியில்லா ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நாளது தேதி வரை எவரும் ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட உரிமத்தினை ஒப்படைத்திட கடந்த 19.06.2026 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு இல்லா நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, கடந்த 02.06.2026 ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் நகரின் முக்கிய இடங்களான 1) மாநகராட்சி அலுவலகம் முன்புறம் 2) பேருந்து நிலையம் மற்றும் 3) நாகல்நகர் ரவுண்டானா மற்றும் 4) காந்த தினசரி காய்கறி சந்தை ஆகிய இடங்களில் விளம்பர பதாகைகள் நிறுவப்பட்டும், விளம்பரப்படுத்தப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இணையவழியில் மற்றும் நேரடி ஒப்பந்தப்புள்ளிகள் (இணையவழி இல்லா)

பெறும் நடைமுறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | கடை எண் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளவர்கள் பெயர் / முகவரி விபரம் | GST நீங்கலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதாந்திர வாடகை விபரம் தொகை (ரூபாயில்) | மதிப்பீட்டிற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து தகுதி பெறும் ஒப்பந்தப்புள்ளி தாரர்கள் விபரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **1** | 12 | திரு. P.மாதவ ராஜா சைமன்<br>2, ராஜலெட்சுமி, ரெட்டியபட்டி, திண்டுக்கல். | ரூ.30,454/- | திரு. P.மாதவ ராஜா சைமன் |
| | | திரு. R.A.துரைப்பாண்டி த/பெ ராஜ்,<br>1பிளாட், எம்.எஸ் நகர்,<br>பொன்னகரம்,ரெட்டியபட்டி,<br>திண்டுக்கல். | ரூ 30,336/- | |

(ந.க.எண்.1004/2026/அ7)

**அலுவலக குறிப்பு..**

1. மாநகராட்சி கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பினை காட்டிலும் கூடுதலான மதிப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதாலும் கலம் 5ல் கண்டுள்ள விபரப்படியான நபர்களுக்கு கடைகளை **மாதாந்திர வாடகை அடிப்படையில் ஒப்படைக்கும் நாள் முதல் 12 வருட காலம்** ஒப்படைப்பு செய்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி கூடுதல் முன்வைப்பு தொகை (12 மாத வாடகை) யினையும், ஒப்பந்தப்பத்திரம் சமர்ப்பித்த பிறகு கடைகளை அலுவலகத்தால் ஒப்படைப்பு செய்திடவும், மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. 12 ஆண்டு குத்தகை / மாதாந்திர வாடகை இனங்களில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வு செய்வதற்கு பதிலாக ஒவ்வாரு ஆண்டும் சீராக 5 சதவீதம் என உயர்வு செய்து மாதாந்திர வாடகைத் தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
4. இம்மாநகராட்சியால் இயற்றப்பட்டுள்ள குத்தகை மற்றும் கடை வாடகை தொடர்பான உப விதிகள், அரசால் இயற்றப்படும் சட்டங்கள், அரசாணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு உட்பட்டு செயல்படவும் தவறும்

குத்தகைதாரர்களின் உரிமங்களை ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைகளுடன் கடைகளை ஒப்படைப்பு செய்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

5. மேலும், மேற்கண்ட வழக்கு தொடர்பாக மாமன்ற வழக்கறிஞரின் சட்டகருத்துரு நிலுவையில் உள்ள நிலையில் சட்டகருத்துருவின் அடிப்படையிலும் நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2107** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

42) இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை உரிம இனங்கள் மற்றும் கடைகளை அனுபவித்துக் கொள்ளும் உரிம இனங்களை ஒப்படைத்திட மின்னனு இணையவழி மற்றும் நேரடி இணையவழி இல்லா ஒப்பந்தப்புள்ளி வரும் 19.06.2026 வெள்ளிக்கிழமை நடைபெறுவதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை பொதுமக்கள் / வியாபாரிகள் / வணிக நிறுவனத்தினர் அறியும் வண்ணம் 1) காமராஜர் பேருந்து நிலையம் 2) இம்மாநகராட்சி வளாகம் 3) காந்தி காய்கனி மார்க்கெட் 4) நாகல் நகர் காய்கனி மார்க்கெட் ஆகிய இடங்களில் பிளக்ஸ் மூலமாக விளம்பரம் செய்திட. கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) கண்ணன் பிரஸ். திண்டுக்கல் - ரூ.33800 /-
2) ஜீவகன் பிரஸ். திண்டுக்கல் - ரூ.33000 /-

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி ரூ.33000/- அளித்துள்ள ஜீவகன் பிரஸ். திண்டுக்கல் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு , மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( **ந.க.எண். 1004 / 2026 / அ7)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) 2026 – 2027 வருவாய் நிதி மற்றும் மூலதன நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசரம் அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம் .

**தீர்மானம் எண்.2108** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

43) தமிழ்நாடு மாநில 2026-ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 வியாழன் கிழமை நடைபெற உள்ளது. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 191 எண்ணம் வாக்குச்சாவடிகள் உள்ளது.

இவ்வாக்குச்சாவடிகளை நேரில் ஆய்வு செய்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்கள் எவ்வித சிரமமின்றி வாக்களிக்கும் வகையில் அடிப்படை வசதிகள் செய்து தர அறிவுறுத்தினார்கள். அதன்படி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 48 வாக்குச்சாவடிகளிலும், தற்போது நிலவி வரும் கோடை வெயிலிருந்து பாதுகாக்க சாமியானா பந்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாட்டம் (Bottam) மற்றும் 20 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் கலன் சப்ளை செய்தல் மற்றும் பிளாஸ்டிக் சேர் அமைத்தல் போன்ற பணி உள்ளிட்ட அனைத்துப்பணிகளையும் வாக்குப்பதிவு நடைபெறும் 23.04.2026 அன்று அமைத்து வாக்குப்பதிவு முடிவுற்ற பின் அனைத்தையும் அப்புறப்படுத்துதல் பொருட்களுக்கான வாடகை போக்குவரத்து செலவு மற்றும் வேலையாட்களுக்கான கூலி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.50 இலட்சத்திற்கு 15.04.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதில் குறைவான விலைப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு

1) வேல்முருகன் பந்தல். கான்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல்
2) வி.காயத்ரி, ஆர்.கே. டெக்கரேட்டர், திண்டுக்கல்
3) ஆர்.எஸ்.எஸ். வாடகை பாத்திரக்கடை அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வேல்முருகன் பந்தல் கான்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. ந.க.எண். /2026/இ4

அலுவலக குறிப்பு..

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.2109</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

44) தமிழ்நாடு மாநில 2026-ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 வியாழன் கிழமை நடைபெற உள்ளது. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 191 எண்ணம் வாக்குச்சாவடிகள் உள்ளது. இவ்வாக்குச்சாவடிகளை நேரில் ஆய்வு செய்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்கள் எவ்வித சிரமமின்றி வாக்களிக்கும் வகையில் அடிப்படை வசதிகள் செய்து தர அறிவுறுத்தினார்கள். அதன்படி வடக்கு மற்றும் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 93வாக்குச்சாவடிகளிலும், தற்போது நிலவி வரும் கோடை வெயிலிருந்து பாதுகாக்க சாமியானா பந்தல், மின் விசிறி

போதுமானதாக இல்லாத வாக்குச்சாவடிகளில் High Speed 250 Watts Padastal விசிறி அமைத்தல், வாக்காளர்கள் அமரும் வண்ணம் பிளாஸ்டிக் சேர் அமைத்தல், இரவு நேரங்களில் வாக்குச்சாவடி அலுவலர்கள் தங்குவதற்கு போதுமான வெளிச்சம் இல்லாத வாக்குச்சாவடிகள் கழிப்பிடங்கள் மற்றும் தேவையான இடங்களில் 25 LED மின் குழல் விளக்கு அமைத்தல், 200 W LED மின் சேமிப்பு விளக்கு அமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாட்டம் (Bottam) மற்றும் 20 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் கலன் சப்ளை செய்தல், கழிப்பிடங்களுக்கு பிளாஸ்டிக் வாளி மற்றும் பிளாஸ்டிக் குவளை சப்ளை செய்தல் மற்றும் மாதிரி வாக்குச்சாவடி அமையவுள்ள ஏ.எம்.சி. சாலை டட்லி மேல்நிலைப்பள்ளியில் அலங்கார அரேபியன் டென்ட் அமைத்தல், வாக்குச்சாவடி உட்புற சுவர் மற்றும் பந்தலின் இருபுறமும் சைடு ஸ்கீரின் அமைத்தல், பிளாக்ஸிலினாலான பெயர் பலகை நுழைவு வாயில் முன்புறம் அமைத்தல், பூ அலங்காரம் அமைத்தல், நுழைவு வாயில் இருபுறமும் வாழைமரம் தோரணம் அமைத்தல், வாக்குச்சாவடி மற்றும் முன்புற பந்தலில் சிவப்பு வண்ண விரிப்பு அமைத்தல், பிளாஸ்டிக் சேர் மற்றும் அதற்கான உறை அமைத்தல், ஏர்கூலர் பொருத்தும் பணி உள்ளிட்ட அனைத்து பணிகளையும் வாக்குப்பதிவு நடைபெறும் 23.04.2026 அன்று அமைத்து வாக்குபதிவு முடிவுற்ற பின் அனைத்தையும் அப்புறப்படுத்துதல் பொருட்களுக்கான வாடகை போக்குவரத்து செலவு மற்றும் வேலையாட்களுக்கான கூலி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.00 இலட்சத்திற்கு 15.04.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதில் குறைவான விலைப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது, அதன் விபரம் பின்வருமாறு

1) வேல்முருகன் பந்தல். கான்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல்
2) வி.காயத்ரி, ஆர்கே. டெக்கரேட்டர், திண்டுக்கல்
3) ஆர்.எஸ்.எஸ். வாடகை பாத்திரக்கடை அண்ட் டெக்கரேட்டர்,திண்டுக்கல்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு. வேல்முருகன் பந்தல் கான்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

ந.க.எண். /2026/இ4

அலுவலக குறிப்பு
மாமன்றம் பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண்.2110** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

45) திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சியின் அனைத்து வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்யும்

பணிக்கு வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம் சேவை வழங்கும் பணிக்கு ரூ.1446.38 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.35883/2022/EA1 - SWM-2, நாள்:17.02.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணியினை மூன்றாண்டு காலத்திற்கு மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை டன் ஒன்றிற்கு ரூ. 3980/- விதம் வழங்கிய தி/ள் கூடு டிரஸ்ட், திண்டுக்கல் நிறுவனத்திற்கு 01.07.2023 முதல் 30.06.2024 வரை ஒரு ஆண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள, இம்மாநகராட்சி மாமன்றத் தீர்மானஎண்.1007 நாள்.31.05.2023ல் அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு கடந்த 09.06.2023ல் வழங்கப்பட்டது. திடக்கழிவு மேலாண்மை பணி அத்தியாவசிய பணியாதலாலும் ஒப்பந்தகாலம் மூன்று ஆண்டுகளுக்கு இருப்பதாலும் பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும் அவசியத்தினை கருத்தில் கொண்டும், ஒப்பந்த உடன்படிக்கை விதிகளின்படி அடுத்தடுத்த ஆண்டுகளின் மாமன்றத்தின் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டு மேற்கண்ட பணிக்காலம் வருகின்ற 30.06.2026 அன்று முடிவடைகிறது. இந்நிலையில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தத்தை இரண்டு மாதங்களுக்கு மட்டும் 31.08.2026 முடிய நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.1196/2026/ நாள்.02.06.2026 உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின்படி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூ. 4752/- மெட்ரிக் டன் வீதம் 01.07.2026 முதல் 31.08.2026 வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்னாக உத்தேச செலவினம் ரூ.240.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 8270/2021/எச்2)

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.2111</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

46) திண்டுக்கல் மாநகராட்சியில் மாநகராட்சிக்கு சொந்தமான 8000 லிட்டர் கொள்ளளவு உள்ள மூன்று எண்ணம் குடிநீர் லாரிகள் மூலம் தேவைப்படும் இடங்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது மின்கட்டண உயர்வு TWAD மூலம் பெறும் குடிநீர் விநியோக கட்டண உயர்வு வாகனங்களின் எரிபொருள் செலவின உயர்வு ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும்

பராமரிப்புச் செலவினங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஒரு லாரி குடிநீர் மாநகராட்சிக்குட்பட்ட எல்லைக்குள் விநியோகம் செய்ய குடிநீர் வாகன வாடகை ஓட்டுனர் மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் உட்பட ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு..**

மாமன்றம் அனுமதிக்கலாம்

---

**தீர்மானம் எண்.2112** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**ஒம்/இளமதி,**
**மாண்புமிகு மேயர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி**

---

**// உண்மைநகல் //**

**ஆணையர்**
**திண்டுக்கல் மாநகராட்சி.**